உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சந்திகை. யச.] சூஅாசக ௵. ஆடி. யரு. திகதி. வியாழக்கிழமை Thursday, July 15, 1841. [No. 14.

வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவையைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும். அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசு கூடினதாயும், எட்டுப் புறமுள்ளதாக நான்காய் மடித்த தாள் அவில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றும் வியாழக்கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, உ பென்சு அல்லது யகூ. வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இதிற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்த பணம் முன்னேறக் கொடுத்து வைத்து, மறு பெயருக்குச் செலவிடகூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு, கஉ. பென்சு அல்லது க. பணம். அல்லது மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால் விலை, கூ பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னேற கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன விலை பத்திரம் ஒன்றுக்கு க. பென்சு, அல்லது அ. வெள்ளைச் சல்லி. மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தவாற்செலவை விட.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவையை உதய தாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித் தபாற்செலவுகொடுத்தனுப்பவும்.

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and General Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The EDITORS OF THE MORNING STAR," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. GRENIER; CHUNDICOLY—M. J. POVIRAYASINGEM; WANNARPONY—S. TAMPIAH PILLY; MOOLLITEVO—A. Mc FARLAND; BATTICALOE—S. A. ALLEGECOON MODLIER; CALPENTYN—J. WOODHULL; TRINCOMALIE—Rev. C. HOLE; COLOMBO—PHILIP CANJIMANADAN; KANDY—REV. W. OAKLEY; MADURA—Rev. F. D. WARD; DINDIGUL—Rev. J. J. LAWRENCE; TANJORE—REV. T. BROTHERTON; MADRAS—P. R. HUNT, Esq.

புங்குடுதீவு.—பரமா நாகநாதபிள்ளை.

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 124.]

இந்து தேசச் சரித்திரம்.—*Trees and plants concluded.*

கருவேலின் வேறொரு இனத்திலிருந்து (Acacia leucophlœa) சனங்கள் ஒருவித சாராயத்தை வடிப்பார்கள். எப்படியெனில், அதின் பட்டையைத் துண்டு துண்டாக வெட்டி அதிற் தண்ணீரையும், பேரீந்துச் சாற்றையும், கொஞ்சச் சற்கரையையுங் கூட்டித் தவைக்க எல்லாஞ் சேர்ந்து சரிதிட்டத்துக்கு வரும்பொழுது சாராயத்தை வடித்துக்கொண்டு சக்கையைத் தள்ளிப்போடுவார்கள். இன்னும் இதில் ஒரினமுண்டு. அதின் மரம் மெத்தவயிரமாயிருக்கும். அதின் இரண்டு தடியை ஒன்றோடொன்று உரிஞ்சுவதினாற் பிராமணர் தங்கள் ஓமத்திற்சேர்ற அக்கினியை வளர்ப்பார்கள்.

தோடைமரம (Orange tree) குளிர்ந்த பூமிகளில் மிகுதியாயுண்டு. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இஸ்பானியா (Spain) தேசத்தில் அநேகந் தோடைமரங்கள் வெகுகாலமாக நிற்கின்றன உரோமாபுரியிலுள்ள சங். சபீனுவின் சந்நியாசச் சாவடியில், (Convent of St. Sabina in Rome) (சூா) வருடக் காலமாய் நிற்கிற ஒரு தோடைமரமுண்டு. அதின் உயரம் (ங) அடி; அதின் அடி மரம் இரண்டுபேர் கட்டிப்பிடிக்க அடங்காத பருப்பமுள்ளது. (See Library of entertaining Knowledge on the authority of Risso. Vol. II. pp. 340.) லின்றிலி என்பவர் (Lindley) தோடைமரத்தின் பிரயோசனத்தைபபற்றிப் பேசுகையிற் சொல்லன கவனிப்பாவது, சங். மிக்கேலின் (St. Michaels) கோவிலுக்கருகேயுள்ள தோடைமரத்தில் சிதைந்துபோன காய்களைத் தவிர, ஒரு முறையில் (உயஅ) தோடங்காய்கள் இருந்தனவென்றும், சிதைந்துபோனவைகளுங் காய்த்தவைகளில் மூன்றிலொருபங்கிருக்குமென்றுஞ் சொல்லியிருக்கிறார். (உயது) காய்க்கு இரண்டு சிலிங்கு ஆறு பென்சு வீதமாக ஒரு வருஷத்தில அவ்வவ்வு தொகையான காய்கள் நிரம்பியவைகளுக்கு அவ்வூர்களில் (கூஅது) பவுன் தீர்வை கொடுப்பார்கள். ஒரு வருஷத்தில் மறு தேசங்களுக்கு ஏற்றப்படுகிற தோடங்காய்களுமோ இரண்டுகோடியே எழுபத்திரண்டிலட்சத்துக்குமேற்படுவதேயன்றிக் குறைவதில்லை.

யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் மறு திசைகளிலும் இவ்வகை மரங்கள் மிகுதி. புளித்தோடையும் இதில ஒரினம். மேற்சொல்லிய மரங்களைப் பற்றி வாலிக்கென்னும் வயித்தியர் செய்தவிருக்க சாத்திரத்திற் (Dr. Wallich's Plantœ Asiaticœ Rariores) காணலாம்.

உக்குரைச்செடி வட பக்கங்களிலுள்ள குளிர்ந்த பூமிகளில மிகுதியாயுண்டு. மேற்கு இந்திய தீவுகளில (West Indies) ஒரினமுண்டு. (Rubus Jamaicencis) கிழக்கு இந்தியாவில (East Indies) பன்னிரண்டு வகையான செடிகள் உண்டென (லிண்றிலி) என்பவர் சொல்லுகிறார். உரோசைப் பூவிதழ்களிலிருந்து (Rubus Damascena) காசுமீரிகள் விலைபெற்ற அத்தரிவடிக்கிறார்கள்.

புல் வகைகளில் அநேகமுண்டு. தெற்பைப் புல்லு (Coosa Grass) பிராமணருக்கு ஓமசாந்தமுதலிய சடங்குகளுக்குக் கூடியது. இதை அவர்கள் பரிசுத்தமென்றெண்ணுகிறார்கள்.

கரும்பு (Sugar-cane or Saccharum officinarum) இந்து தேசமெங்குமுண்டு. ஆனாலும் அது மிகுதியாய்ச் செய்யப்படுகிறதில்லை. கரும்பை மொளி மொளியாகத் துண்டு பண்ணி இந்தியர் கடைகளில் வைத்து விற்பார்கள்.

வாழைமரம் (Plantain tree or Musa Paradisiaca) இலங்கைத்தீவிலும் இந்துதேசத்தின் தெல பகுதிகளிலுமுண்டு அதிற் பல இனங்களுண்டு. அவையாவன, மொந்தன், கதலி, தேன்கதலி, கப்பற்கதலி, கப்பல்வாழை, சிங்கன்வாழை, யானைவாழை, மருந்துமாவாழை, இதரை, செவ்வாழை, ரஸ்த்தாளிவாழை, மலைவாழை முதலியவைகளே.

கொடி முந்திரிகைச் செடி (Vine) இந்து தேசத்தின் சில பகுதிகளில் மாத்திரமுண்டு. இது குளிர்ந்த பூமியில் மிகுதியாயுண்டு. பிராஞ்சி முதலிய நாடுகளில் இக்கொடிகள் மிகுதியாயுண்டாவதுமல்லாமல அவ்விடத்துப் பழங்கள் மகா இனிமையாயுமிருக்கும்.

செவ்வந்தி (Hyacinth,) மல்லிகை (Jessamine,) காட்டுமல்லிகை, JugsminumGrandiflorum) மருக்கொழுந்து, வெட்டிவேர், இலாமிச்சவேர், அலரி துளசி முதலியவாசனைப்புடபங்களும பூண்டுகளும், வேர்களுமுண்டு. இவைகளை அல்லாமல் மூலிகைகளும பற்பல செடிகளுமுண்டு. அவைகளைப்பற்றித் தமிழ் வாகட நூல்களைப் பார்த்தால் விளங்கும்.

நாடுகளிலும, காட்டுப் புறங்களிலுமுண்டாகிற பற்பல மரங்களுண்டு. அவையாவன, அனிச்சம அகில, ஆச்சா, இருவாட்சி, இலந்தை, இலவு, இருப்பை, உபில், காஞ்சுரை, எட்டி, எலுமிச்சை, ஒடை, கடம்பு, நிலக்கடம்பு, வெண்கடம்பு, கூந்தற்பனை, கடவை, கடுக்காய்மரம், கமபினி, கருக்குவாளி, மஞ்சல்நுணு, மகிழ், கருங்காலி, செங்கருங்காலி, குங்குமம், குமிழ், கொன்றை, கோங்கு, செருந்தி, நறுவிலி, சேங்கொட்டைமரம், தணக்கு, தான்றி, தேற்று, நாயுருவி, நாவல,

Digitized by Google

சம்புநாவல், நெல்லி, பாதிரி, பாலை, அரசு, ஆல், இத்தி, அத்தி, ஒமை, காயா, குருந்து, சிவந்தி, தெங்கு, பராய், புன்கு, முருங்கை, முச்கு, புன்முருக்கு, புல்லை, மஞ்சாடி, மாதளை, மாவிலங்கை, வங்ணி, வாகை, வில்வம், விளா, வெட்பாலை, வேங்கை, வேல், கற்றேச்சு, சவுக்கு, கிராஞ்சி, விடத்தல், கொண்டல், கண்டல், சேமர்சிரி, ஒதி, கொழுக்கை, தோதகத்தி, மலைவேம்பு, பூவரசு, வேம்பு, பூந்தி, செம்பரத்தை, பன்னை, ஆமணக்கு, சிற்றாமணக்கு, வாதமை, ஆத்தி, கருவேம்பு, கருவை, அகத்தி, மருதோன்றி, கற்றகத்தி, குசும்பா, மா, கொய்யா, பம்பளிமாசு, தோடை, வெட்சி, கிளுவை, முந்திரிகை, வாழை, நெல்லி, கொச்சி முதலியவைகளே.

(இன்னும் வரும்)

கூட்டேன்பவர் செய்த பிரபஞ்ச நூல்.

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

முதற்பிரிவு.—யஉ. அதிகாரம்.

உதிரச்செல்கை, சுவாசித்தல் முதலியவைகளைப் பற்றி.

க. மேலை அதிகாரத்தில் சீரணேந்திரியங்களினது தொழிலை ஆராய்ந்து, உணவானது அலகு, பல், அல்லது விசேஷித்த தசைநாரால் முதற்சப்பப்பட்டு மென்மையான குழைவாகிப் பிறகு இரைப் பையிலிருக்கு மூலாக்கினியென்னுஞ் சீரண நீரினாலே வெண்ணீராய் மாறியிருக்கும் நிலைபரத்தில் இந் நீரை யொரேயடியிலிருந்து கிளர்வதாகிய எண்ணிறந்த மெல்லிய துவாரங்கள் குடித்து இருதயத்திற் சேர்க்கின்றனவெனக் கண்டோம்.

உ. ஆனாலும் இந்நீர் இருதயத்திற் சேர்ந்தபோது சுத்தரத்தமல்ல. அது மூச்சுக் குடலுக்குப் போய்நாம் சுவாசிக்கிற வாயுவுடனே கலந்து அதின் பின் எங்கள் இரத்ததாதுட் சேர்ந்து சீவனுக்கு ஆதாரமாகும்படி பக்குவமாகின்றது.

ங. இருதயத்திலே நாலு குழிகளுண்டு. இரத்தம் வலப்பக்க இருதயத்திற்சேர்ந்து ஒவ்வொரு மூச்சுக் குடலுக்கும் ஒவ்வொன்றாக இரண்டு கவர்கொண்டு பிரியும் மூச்சுக் குடலின் இரத்ததாதுவென்னும் ஓர் தாதுவினால் மூச்சுக் குடலுக்குப்போகின்றது. இதில் பருந்தாதுக்கள் மேலு மேலுங் கவர்விட்டு மெல்லிய துவாரமுள்ள பின்னல் வேலைபோலாகி மூச்சுக் குடற்பகுதியிலுள்ள சுவாசத் தாதுகளை மூடியிருக்கின்றன. இவ்வழியாய் ஒவ்வொரு உதிரத்திவலையும் நாம் மூச்சுக் குடலுட் பூரகம்பண்ணுகிற வாயுவினது தொழில் முயற்சிக்கு எற்படுத்தப்படுகின்றது.

ச. கடைசியாய் இரத்ததாதுக்கள் கண்ணாலேயோ கண்டுபிடிக்க வரிதான நுண்ணியவைகளாய்ப் பிரிகின்றன. இவை தம்போலு நுண்ணிய பின்னொருவகை இரத்ததாதுக்களுடனே ஒன்றித்து ஓடுகிறவாய்ப் பூதக்கண்ணாடிகள் வழியாய்க்காணப்படுகின்றன. இந்தப் பிந்தினவகையான இரத்ததாதுக்கள் இயல்பாய்ப் பிரகாசமுள்ள இரத்தாம்பர நிறமாயிருக்கிற உதிரத்தை இருதயத்திற்கு இடப்பக்கமாகத் திரும்பவுங் கொண்டுபோய்ச் சேர்க்கிற நான்கு இரத்ததாதுகளுடனே வந்து சந்திக்கிறவரைக்குங் கூடிப் பொருந்தியோடுகின்றன.

ரு. இந்த இடதுபக்கத்திலேயிருந்து உதிரமான
பருந்து பருந்து ஓடத்துவங்குகின்றது. இந்த உதி
இருதயத்திற்கு முயற்சியை உண்டுபண்ண இருதய
சுருங்கி விரிகிறதினால் நாங்கள் இலகுவாய்ப் பரிசி
தாகிய இருதய நாடி அல்லது கைநாடிபோட்டம் உ
டாகின்றது. இதினால் உதிரம் இரத்ததாதுக்களுக்
செலுத்தப்பட்டு அவைகளினால் தேகத்தினெவ்வெ
பகுதிக்குங் கொண்டுபோகப் படுகின்றது. இந்த இ
ததாதுத் துவாரங்கள் பலபல கவையாகி அக் கவை
மேலும் சிறுக் கவைகளாகித் தீர்க்கமான பூதக்கண்
டிகள் வழியாயும் கண்ணுக்குத் தோற்றக் காட்டாத
ன்னியவாய்ச் சருவாங்கமுஞ் செல்லுகின்றன.

சு. இரத்த தாதுகளில் இருக்கிற உதிர மானது
துசரீரத்தின் ஒவ்வொரு கருவியின் ஒவ்வொரு பகுதி
லும் போய்ச் சேர்ந்து அவையாவுக்குஞ் சீவாகாரத்
க்கொடுக்க அதின்மேல் மெல்லிய இரத்த தாதுகள்
ம்பவும் அதை இருதயத்துக்குக் கொண்டு வருகின்

எ. இவ்விரத்ததாதுக்கள் வழியாய் உதிரம் இரு
த்திலே வந்துசேரும்பொழுது, தன்னிலுண்டான
நிலையை இழந்துவிட்டதாய்த் தோற்றுகின்றது
லையென்றுபோகினும் சுவாசமானது மூச்சுக்குடல
டத்து அதற்குண்டுபண்ணியிருந்த பிரகாசமுள்ள
வ்வன்னத்தை இழந்துவிட்டது.

அ. அது கருஞ்சிவப்புநிறமாயிருந்து இருதயத்து
வரச் சற்று முன்னிதாய் நுரைப்பையின் சீரணேந்தி
ங்களினிடத்து உண்டான புதுச்சாரத்தினுந் தனக்கு
வேண்டிய அளவு பற்றிக்கொண்டு வலப்பக்க இரு
த்திற்போய் விழுகின்றது. அதில் இருந்து அது பு
ன வாயுவை அல்லது உயிர்ச்சத்துவை அடையும்ப
முன்போல மூச்சுக்குடலுக்குப் போகின்றது. ஆ
டியினால் உதிரச்செல்கை இருவகைத்தாதுக்களினு
டைபெறுகின்றது. அவை உதிரச்செலவுத்தாது, உ
வரவுத்தாது எல்பவைகளே. உதிரச்செலவுத்தாது
ள் உதிரத்தைச் சரீரத்தின் ஒவ்வொருபகுதிக்குஞ்
ல்லப்பண்ண உதிரவரவுத்தாது அத்தை மறுபடி இ
தயத்துக்கு வரப்பண்ணுகின்றது.

கூ. இரத்தச்செல்கையில் நடக்கும் விசேஷத்த
த்தியமென்னவெனில் அது மூச்சுககுடலில் அடை
மாறுதலே. இது சுவாசதொழிலினாலே உண்டாகி
து பரமாணுவில் இருந்து சீவனுக்கு ஆதாரமாகுந்
யுவாயுவை மூச்சுக்குடலுக்குட் பூரகம்பண்ணுகிற
இந்தத்தேயுவாயு உதிரத்தின் கருஞ்சிவப்புவன்னத
வெண்சிவப்பு வன்னமாக்குந் தத்துவமுள்ளதாய் இ
க்கின்றது.

ய. நாம் மூச்சுக்குடலில் இருந்து தேயுவாயுவை
நீருகவல்ல அதில் ஒருபகுதியையும் பிறிதிவித்திரா
மென்னும் பின்னொருவாயுவையும் இரேசகம்பண்ணு
றோம். ஒரு நிறைவளர்ச்சியான மனிதன் ஒரு நாளி

Digitized by Google

...வாசிக்கும் வாயு எழுபத்தொன்பது கொக்கிஸ்கேட் ...ன்றும் அளவுக்குச்சரியென்றும், ஒருநாளிலே அவன் ...ரேசிக்கும் பிறிதிவித்திராவகவாயு சேர்த்திருக்கிற் பி ...திவிப்பிண்டமாக்கக் கூடியதுபோலாகுல் ஏழு அவுன ...நிறை நிற்குமென்றுங் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

௰௧. அநேகம்பேர் ஒரு சின்ன அறையிற் கூடி நெ ...ங்கியிருக்கும்பொழுது அதிலுள்ள பரமாணுவை ந ...சுவாயுவாக்குவது இந்தப் பிறிதிவித்திராவகவாயுவே ப ...மாணுவிலுள்ள தேயுவாயு அற்றுப்போக அதினிடத் ...தப் பிறிதிவித்திராவகம் நிறைந்து பரமாணுவின் சீ ...சாரம் அது என்னவானாலும் அழிந்துபோக அந்தப் ...ரமாணுவை நாம் சுவாசிக்கக் கூடாமற் புதுப்பரமா ...ணு உள்ளேவராவிட்டால் திக்குமுக்கடைத்துச் சீக்கிர ...திற்சாவோம்.

௰௨. உதிரம் சரீரத்தைவளர்க்கும்படி அதைச் சுத் ...பண்ணிப் பக்குவமாக்குவது இந்தப் புதுப்பரமாணு ...வ. உதிரமானதுவோ மிகவும் நூதனப்பதார்த்தமா ...அதின் பற்பல பகுதிகளுள் இரும்புஞ் சந்தகமுமு ...ளதாயிருக்கின்றது.

௰௩. இள்வயதான ஒருவனிலுள்ள இரத்தம், உ அ, ...ருத்தல் நிறை நிற்கிறதாயிருக்கில் அதில் இரும்புப்ப ...று, ரு, அவுனஸ் நிறக்குமென்று கண்டிருக்கின்றது. ...ற்பது மனுஷருடைய இரத்தத்திலுள்ள இரும்பு ஒ ...ந நல்ல கொழுவுக்குக்காணும். அந்த இரும்பு இரத்த ...த்தைவிட்டு இலகுவாய்ப்பிரித்து உலோகமாக்கிக் கொ ...ழுவடிக்கலாம்.

௰௪. ஆகையால் "இரும்புமனுஷர்" "இரும்பு நரம்பு ...ளவர்கள்" "இரும்புச்சடம்" முதலான விதமாய்ப்பே ...வது ஒவ்வாதபட்சமல்ல, ஏனெனிற் சில மனுஷரில் ம ...ற்றபேரைப்பார்க்கிலும் அதிக இரும்புண்டு. இப்படி ...ருப்பது உதிரச்செல்கை கறியாய் நடக்கும்படிக்கே. ...து பரமாணுவில் ஊசாடுவதினாலுஞ், சரீராப்பியாசம் ...ண்ணுவதினாலுஞ் சித்திபெற இருப்பணுக்கள் இருத ...த்திலொன்றி மனதை யர்திக்க அல்லது இருதயத் ...தைத் தொர்திக்கப்பண்ணமாட்டா.

௰௫. மீன்கள் தங்கள் செட்டைகள் வழியாய்ச் சுவா ...சித்துப் பரமாணுவிலிருந்து தேயு வாயுவை வாங்காம ...ல், தண்ணீரில் இருந்து வாங்குகின்றன. செட்டையுள் ...ள பூச்சிகள் தங்கள் சரீரத்துக்கு இரு பக்கத்திலுமுள் ...ள சிறுத் துவாரங்கள் வழியாய்ச் சுவாசிக்கின்றன. பூ ...ச்சிகளுக்கு இருதயமும் மூச்சுக்குடல்களுமில்லை. ஆ ...னாலும் எல்லாவித மிருகங்களுக்கும இந்த மூச்சுத் து ...வாரங்களுண்டு. ஒவ்வொரு மிருகத்திற்கும் சீவிக்கிற ...தற்குப் பாமாணு, அல்லது தேயுவாயு வேண்டியதாய் இருக்கின்றது.

௰௬. பூச்சிகளின் முதுகு நெடுக ஒருசவ்வுக்குழல் இருக்கின்றது. அத்தைப் பிரபஞ்சவியாதர்கள் இரு தயமாக அல்லது இருதயத்தின் கருமத்திற்குக் கூடியதாக எண்ணுகிறார்கள். தேள்களுக்கும், பொட்டுப் பூச்சிகளுக்கும் வளமான இருதயமுண்டு. ஆகையால் ஏமகவியரென்பவர் பூச்சிகளின் வகுப்பில் இருந்து அவைகளை நீக்கியிருக்கிறார்.

[The following article is the original of the foregoing.]

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

The circulation of the blood, breathing, &c.

PART I.] [CHAPTER. XII.

1. In the last chapter, we traced the action of the digestive organs: we found the food was first crushed by means of jaws, teeth, or peculiar muscles; next reduced to a pulpy mass, and then into a milky liquid by means of the gastric juice of the stomach; and in this state the liquid is drank up by the mouths of innumerable little vessels, which finally unite in one common trunk, and carry it to the heart.

2. But this fluid, when it has reached the heart, is not real blood; it is to be carried to the lungs, and there united with the air we breathe, before it is fitted to circulate in our veins and support life.

3. The heart consists of four cavities. The blood is first received into the heart on the right side, and is conveyed to the lungs by an artery called the pulmonary artery, which divides into two branches, one for each of the lungs; here the large arteries are divided again and again, till they form a beautiful net-work of minute tubes all over the air vessels, of which substance the lungs consist. By this means, every particle of blood is exposed to the influence of the air we draw into the lungs.

4. The arteries at last become too small to be traced by the eye alone; by means of magnifying glasses, it is found they unite with veins equally as minute; these veins progressively unite till they centre in four common veins which carry back the blood, now of a bright scarlet color, to the left side of the heart.

5. From this left side, the circulation of the blood commences The blood excites the heart, the heart contracts, causing the pulsation or beating of the heart which we can easily feel; the blood is, by this means, impelled into the arteries, and by these carried to every part of the body. The arterial tubes divide and subdivide, and branch out in every direction till the eye can no longer follow them, even when aided by the best glasses.

6. When the blood in the arteries has visited every portion of every organ of our bodies, and supplied all with the food of life, it is taken up by the minute veins and brought back to the heart.

7. The blood, when it reaches the heart by the veins, seems exhausted of its living principle; at least, it has lost the bright scarlet color which the air gave it in the lungs. It is of a deep purple hue, and just before it reaches the heart, it receives its regular recruit of new matter from the digestive organs of the stomach, and then empties itself into the right side of the heart, whence it is again sent to the lungs, as before, for a new supply of air or vital power.

8. The circulation of the blood, therefore, depends upon two distinct sets of vessels, namely, arteries and veins; the ar-

Digitized by Google

teries carry it forward to every part of the system, the veins return it to the heart.

9. The most important process which takes place in the circulation of the blood is its change in the lungs. This is performed by the act of respiration or breathing. We draw into the lungs, from the atmosphere, oxygen gas, the kind of air which supports life. This oxygen has the power of changing the deep purple of the blood to a bright scarlet.

10. We throw out from the lungs a part, but not all, of the oxygen; and also another gas, called carbonic acid. It has been calculated that a full-grown person requires in the course of a day a quantity of air equal to about seventy-nine hogsheads. The quantity of carbonic acid gas thrown out during the same time by the lungs, if condensed into solid carbon or charcoal as it might be, would weigh eleven ounces.

11. It is this carbonic acid gas which poisons the air when too many persons are crowded into a close room. As soon as the oxygen of the atmosphere is exhausted, and its place filled with this carbonic acid, the living principle of the atmosphere, whatever it may be, is destroyed, and we cannot breathe it, and should soon be suffocated and die, if fresh air was not allowed to enter.

12. It is this fresh air that purifies and prepares the blood to nourish the body. The blood itself is a curious substance, having among its different materials a portion of iron, and some sulphur.

13. It has been ascertained that in an adult, whose blood would weigh twenty-eight pounds, there would be found about three ounces of iron. The blood of forty men contains sufficient iron to make a good ploughshare; and the iron might easily be extracted from the blood, reduced to a metallic state, and manufactured into a ploughshare.

14. It is not then so very absurd to speak of "men of iron;" those who have "iron nerves," "iron constitution," and so on; because it is, no doubt true, that some persons have more *iron* in their nature than others. The great aim should be to keep the blood in active circulation, and this may be done by taking air and exercise, so that the particles of iron need not unite in the heart, and thus make us heavy-minded or hard-hearted.

15. Fishes breathe by means of their gills, and they separate oxygen from the water, instead of drawing it from the air. Insects having wings, breathe by means of little holes, called stigmata, placed on each side of the body. Insects have no heart or lungs; but all kinds of animals have more or less of these breathing holes, and every animal requires air, or rather oxygen, in order to live.

16, There is a membraneous tube, running along the back of insects, which many naturalists suppose to be a heart, or to answer the purposes of a heart. Scorpions and spiders have a proper heart; and M. Cuvier has, on this account, struck them out of his list of insects.

[From Williams' Missionary Enterprizes in the South Seas.]

தென் சமுத்திர தீவுகளில் நடந்த சங்கதி.

[Continued from page 125.]

(நியுசவுதவேல்சிலே) நாங்கள் எட்டு மாதம் இருந்து சுகம்பண்ணிக்கொண்டு எங்கள் சகோதரரிடத்திலே திரும்பி வந்தோம்.

அங்கே இருக்கையில் (அத்துதாகி) தீவில் மிசியோனரிமாய் ஏற்படுத்தப்பட்ட (பட்பியல், வாகுபதன்) என்னும் இருவரும் எழுதிய காகிதம் ஆசாடஉஅ. சித்திரை மீ. எங்களுக்குக் கிடைத்தது. அவர்கள் காகிதம் எழுதி அனுப்பின அக்கப்பல வழியாய் நாங்கள் அவர்களுக்கு புத்தகங்களையும், வெகுமதிகளையும், காகிதங்களையும் அந்தச் சாமான்களுக்குக் காவலாக (பொருய்) என்னப்பட்ட (இராத்திரியன்) ஒருவனையும் அனுப்பினோம். இவன் (அத்துதாகி) க்கரையிலே சேர்ந்தபொழுது, தீவார் அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய்த் தங்கள் விக்கிரகங்களுக்கு முன்னே வட்டபோது, (பொருய்) என்பவன் விக்கிரகச் சிலையை அடித்து விக்கிரகத்துக்காரராகிய அவர்களைப் பார்த்துச் சொன்னது, 'நீங்கள் ஏன் இந்தத் துட்ட தேவதைகளை எரிக்கவில்லை? அவைகள் பசாசுகள். ஏன் அவைகளை எரியாமல வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எண்ணுகிறதெல்லாம் மாரீசமென்று சொன்னான். அதற்கு அவர்கள் நாங்கள் அறியாமையுள்ளவர்களாய் இவ்வளவும் பசாசின் அடிமைத்தனத்திலே இருக்கிறதுமல்லாமல் உண்மையை அறியாமல் இருக்கிறோமென்று" சொல்ல, (பொருய்) என்பவன் கிறிஸ்து மார்க்க உபதேசிமார் இங்கே கொண்டுவந்த போதகமே உண்மை, அதை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுங்களென்று சொன்னான். இவைகளைக் கேட்டவுடனே, தீவார் இவனை நோக்கி நீ திரும்பி (இராயதத்தியா)வுக்குப் போமபொழுது, (வில்லியம்) என்பவர் வந்து எங்களைக் கண்டால இவ்விக்கிரகங்களை எரித்துப்போடுவோமென்று அவருக்குச் சொல்லியென்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள். இத்துடனே (இராயதோங்கு) என்னும் இதற்கடுத்த சிறுத் தீவிலும் இருந்து சனங்கள் வந்து வசனத்தைக் கேட்டுக் குணப்பட்டுத் தங்கள் தீவுக்குத் திரும்புகையில தங்களோடே கிறிஸ்தமார்க்க உபாத்திமாருங் கூடப் போகும்படி விரும்புகிறார்களென்ற செய்தியையுங் கேள்விப்பட்டுக் கர்த்தருடைய வசனம் (அத்துதாகி)யிலும் அதன் சுற்றிலுள்ள மற்றுஞ் சிறுத் தீவுகளிலும் பரம்புவதற்கான காலஞ் சமீபமாய் வந்ததென்றெண்ணிச் சந்தோஷப்பட்டேன். மேலும (அத்துதாகி)யிலிருந்த இரண்டு கிறிஸ்துமார்க்க உபாத்திமார் தங்களுக்கு உதவியாக இன்னுமிரண்டு பேர் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இவைகளைக் குறித்து நானுந் (திற்கல், விறின்) என்னுங் குருமார் ஒரு கூட்டம வைத்துச் செபம்பண்ணினதின் மேல், நானும் கூட்டாளியாகிய (விறின்) என்பவரும், எங்களோடே உள்ளூர்ப் போதகர்கள் சிலரையுங் கூட்டிக்கொண்டு, (எழ்வி) என்னுங் கூட்டத் தீவுக்குச் சொந்த (அத்துதாகி) (இராயதோங்கு) முதலிய தீவுகளிலுஞ் சுவிசேஷத்தை அறிவிக்கப் போவதற்குக் கப்பல் [illegible]ரிக்கத் தொடங்கினோம்.

அப்படியே ஊர்ப் பிறந்த போதகர்களில் எங்கள் (இராயதத்தியா)விலே சபைக்குரிய நாலு பேரும் அவர்கள் மனைவிகளும் (த[illegible]யை) சபைக்குரிய இரண்டு பேரும அவர்கள் மனைவிகளும் எங்களுடனே வரும்படி பயணம் புறப்பட முதலுள் இராத்திரி நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய வழிச் செலவையும், மற்றச் சாமான்களையும அந்தச் சபையார் கொடுத்தனுப்பினார்கள்.

நாங்கள் எல்லாரும பயணம் புறப்பட்டதின் மேல் யாதொரு சேதமின்றி (அத்துதாகி) தீவிற் சேர்ந்தோம நாங்கள் கரைக்கு அடுத்தவுடனே, அத்தீவார் சிறு வள்ளங்களில் ஏறி எங்கள் கப்பலுக்கடுக்க வந்து, கப்பலில ஏறிக்கொள்ள வாஞ்சையுள்ளவர்கள் போலக் காட்டினார்கள். நாங்களோ அத்தீவிற் பிரதானியைய அல்லது நாங்கள் நியமித்த உபாத்திமாரில் ஒருவனைக் காணுமட்டுந், தீவாரில் ஒருவருங் கப்பலுக்குள் வராதபடி திர்மானித்திருந்தோம். இப்படியிருக்கையிற் படையினின்ற வள்ளங்களில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் எங்களுக்கு ஆசாரவுபசாரஞ் செய்தபின் சிலர், "தேவனுடைய வார்த்தையே நல்லது. அது (அத்துதாகி)யருக்கேற்றதென்று மாறி மாறி உரத்த சத்தமாய் கூவிவிட்டார்கள்." அவர்கள இவ்விதமாக இவ்வளவெல்லாஞ் சொல்லியுந் தடைபண்ணிக்கொண்டிருந்தோம். நாங்கள் தங்களை நம்பவில்லையென்பதை அ[illegible]ன் படடுக்கட்டித், தாங்கள் நேர்மையான எண்ணமுள்ளவர்களென்பதை எங்களுக்கு வெளிப்படுத்தும்படி, சிலர் தங்கள் தொப்பிகளையும, வேறு சிலர் தங்கள் எழுத்துக்கூட்டுச் சொற் புத்தகங்களையுங் காட்டினார்கள். இச்சமயத்தில் நாங்கள் அனுப்பின உபாத்திமார் தாங்கள் இன்னுஞ் சீவனோடிருக்கிறார்களென்பதை நாங்கள் அறிந்துகொள்ளத்தக்கதாகக் கப்பலில் இருந்து நாங்கள் காணும்படி ஊர்மனைக்குள்ளே ஒரு வெள்ளைக் கொடி பறக்கத் தூக்கினார்கள். மேலும் எங்கள் கப்பலைத் தேடிக்கொண்டு தீவிற் பிரதானியுடைய வள்ளமும் அதில் முதன் முதற் சுவிசேஷத்தைக் கேட்டு மனந் திரும்பின (தேபாரி) என்பவனுமாக வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது (தேபாரி)

Digitized by Google

ப்பவல் தீவாரின் விக்கிரகங்கள் எல்லாம் எரிக்கப்பட்டுப்போயினவென்றும், மீந்திருக்கிறவைகள் உவாத்திமாரிடத்தில் இருக்கின்றனவென்றும், பெரும்பாலும் எல்லாருங் கிறிஸ்த மார்க்கத்தை அநுசரிக்கிறார்களென்றும், விக்கிரகாராதனைக்காரன் ஒருவனென்குதல் இல்லையென்றும், அறுபத்தைந்து முழத்தில் ஒரு தேவாலயங் கட்டப்பட்டிருக்கின்றதென்றும், அதின் சுண்ணவேலையாவும் முடிந்திருக்கிறதென்றும், நான் போய்ப் பிரதிட்டை பண்ணும்படி காத்திருக்கிறார்களென்றும் அவ்விடத்திலுள்ள பிரதான சங்கதிகளை எங்களுக்கு அறிவித்தான். இச்செய்திகளைக் கேட்டுக்கொண்ட சமயத்தில அவ்விடத்தில் வாசமாயிருந்த உவாத்திமாரும் எங்களிடத்தில் வந்து, நாங்கள் கேட்டவைகளை உண்மையென்று உறுதிப்படுத்தினதுமேயன்றி ஓய்வுநாளில அத்தீவார் யாதொரு வேலையுஞ் செய்யாதபடி அதைப் பரிசுத்த நாளாய் ஆசரித்துவருகிறார்களென்றும், ஆண், பெண், குழந்தைகள் யாவருந் தேவாராதனைக்கு வருகிறார்களென்றும் தேவலக்கும் பெரும்பாலுஞ் சமுசாரச் செபம் நடக்கின்றதென்றுஞ் சொன்னார்கள். தீவாருடைய முகஞ் சந்தோஷத்தினால் நிறைந்திருந்தது. இப்புதுமைகளை நாங்கள் கேள்விப்பட்டவுடனே, இவைகளை எங்கள் கண்களினாற் காணவேண்டுமென்று தாமதம்பண்ணாமல் இறங்கினோம். கரைக்குப் போக நாங்கள் வள்ளங்களில் இறங்கினவுடனே, தீவாரில் அநேகர் நாங்கள் ஏறின வள்ளங்களைத் தாங்கி முன்னிவர்களுக்குள் வாடிக்கையாய் இருந்த அருவருப்பான கப்பற் பாட்டுக்களைப் படியாமற் சிலர் ஞானப் பாட்டுக்களையும், வேறு சிலர் செபமாலைகளையும், வேறு சிலர் கேள்வி மறுமொழிகளையும், இப்படி அவனவனே தனக்குப் பிரியமானபடி பாடமான சில பாடங்களைப் படித்து இவ்விதமாகத் தாங்கள் இந்தப் புதுக்காரியங்களினால் எவ்வளவுந்தேறியிருக்கிறார்களென்பதைக் காண்பித்துக் கரையிலே எங்கள் வள்ளங்களைத் தாங்கிக்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

நாங்கள் கரைசேர்ந்த சில நாட்களுக்குப் பின், சனங்களையும், தீவின் பிரதானிகளையும் அழைத்து ஒரு கூட்டம் வைத்து, விக்கிரகாராதனை இல்லாமற் போனதற்காகவும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அறிவாளிகளாய்த் தீவார் தேறுகிறதற்காகவும் எங்கள் மனதிலுள்ள மிகுந்த சந்தோஷத்தை வெளிப்படுத்தி, மேலும் இவர்களுக்குப் போதிக்கிறதற்குக் கொணர்ந்த உவாத்திமாரையும், அவர்கள் மனைவிகளையுங் குறித்து அவர்களும் உங்களுடன் வாசமாய் இருப்பார்களென்றும் அறிவித்தோம். மேலுந் தேவாலயம் பிரதிட்டைபண்ணவேண்டிய அவசியமாயிருப்பதால, நாளைக்குப் பிரதிட்டைபண்ணச் சனங்கள் வந்து கூடுகையில், அணிந்திருக்கிற அஞ்ஞானப்போங்கான ஆபரணங்களை அவிழ்த்துப்போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதற்குத் தடையுண்டோவென்று கேட்டதற்கு இல்லையென்று உத்தரவு சொன்னதுமேயன்றி நாங்கள் அதிகமாய்ப் பேசவேணுமென்றுந், தாங்கள் மிகவுங் கருத்தாய்க் கேட்போமென்றுஞ் சொன்னார்கள். இதின் மேற் தேவாலயத்தைப் பார்க்கவேண்டுமென்று போனோம். அதின் நீளம (சுரு) முழமும, அதின் அகலம (உய) முழமுமாயிருந்தது. (இராயதத்தியா) விலுள்ள தேவாலயத்தைப் போலச் சுறடபாய்ச் சாந்து பூசப்பட்டிருந்தது. மறுபடி அவ்விடத்திலிருந்த உவாத்திமாருடைய வீடுவாசலைப் பார்க்கப்போனோம். அதுவுஞ் சுண்ணவேலையாய் இருந்தது. இவர்களுடைய முயற்சிக்கும் முன்மாதிரிக்கும இவர்களை மெச்சிக்கொண்டோம். மேலும் இந்த உவாத்திமருடைய வீடுகளின் மாதிரியைப் பார்த்துத் தீவாரில் அநேகர் தங்கள் வீடுகளைக் கட்டிமுடித்ததுமேயல்லாமல இன்னும் அநேக வீடுகளின் வேலைகள் துவக்கப்பட்டு முடிகிறதற்கேதுவாய் இருந்தது. அவ்வளவு கொஞ்சக்காலத்தில் இவ்வளவு மாறுதல உண்டானதற்காக நான் மிகுதியாய்ப் பிரமித்தேன். இதற்குப் பதினெட்டு மாதத்துக்கு முன் இத்தீவார் மகா கெட்டவர்களாய் இருந்தார்கள் இப்பொழுதோ பதவிய குணமும், பட்சமுங், சுதியுமான சனங்களாய் இருக்கிறார்கள். (இன்னும்வரும்.)

[History of Hindu Astronomy, read at an Examination of Batticotta Seminary May 26th. 1841. by D. L. Carroll]

இந்தியர் கணிதசரித்திரம்.

மனிதன் தோற்றிய நாள்முதல் வானசோதியைத் தன் கட்புலன் வழியறிந்து அவை கீழ்பாலுதித்து மேல்பாலத்தமிப்பதை யாச்சரியத்துடன் நோக்கி, இராக்காலம் வானமெங்குஞ் செறிய மணிகள் போல அலங்காரசொரூப பாவனையைக்காட்டா நின்றயாவும் ஆதித்தன் ஒளியைக்காணுமிடத் தொழிந்தவாறும் எவ்விதமென எண்ணுவானாகையாற் கணிதசாத்திரம் மனிதன் தோற்றிய நாளே உற்பத்தியானதென அறியலாம் ஆனாலும் இவ்வறிவு முதன்முதல் ஆரினால் எக்காலத் தொழுங்காய் நிரைக்கப்பட்ட நூலாயதென நிதானிப்பதெளிதல்ல.

இதுநிற்க இந்தியர் கணிதசரித்திரம் மிகுந்த பலவுகொண்டதாய் அத்துடன் சேரவிசைக்கப்பட்ட கட்டுக்கதைகளிலிருந்து பிரித்துக்கொள்வதரிதேனும். இவர்கள் கணிதம நன்குணர்ந்த பெண்ட்லி (Bently) என்பவர் செய்த கணிதசரித்திரத்தைத் திரட்டிச் சுருக்கமாய்க் கூறப்படும்.

இந்தியர் கணிதசரித்திரமானது பூருவசரித்திரம், அபரசரித்திரமென இருவகைப்படும். மேலும் இவ்விரு வகைச் சரித்திரத்தையும் எட்டுக்காலப்பகுதிகளில் அடக்கிச் சொல்லப்படும்.

கவது. கலியர்த்தம (ஆசுாஎசும்,)ஆ. அஃதாவது கிறிஸ்துபிறக்க, (தசாஉசு.) வருடத்துக்குமுன் இந்துமதசத்தவர்கள் கணிதசாத்திரத்திற் கொஞ்சமுந் தேறிருந்தார்களென எண்ணவிடமுண்டு. ஆனாலும் மேற்குறித்த ஆண்டுதொடங்கி இச்சாத்திரத்திற் றேறி வரவர அதிற்றெளிவு கொண்டவர்களானார்களெனக் காண்கின்றது.

இக்காலத்தில், (தசாஉசும்.)ஆ. நட்சத்திரங்கள், (உஎ.) எனநிதானித்து அவைகளுக்கு மூலநட்சத்திரமாதியாய் நாமங்கள் சூட்டப்பட்டன. மேலுந் திரேதாயுகத்தின் மூற்கூறில், (காவில்) தக்கன் என்பவன் தனது குமாரத்திகளாகிய, (உஎ,) நட்சத்திரங்களையுஞ் சந்திரபகவானுக்கு விவாகம்பண்ணுவித்தானென்றும் அவர்களில் உரோகணி, மகம், பூராடம், பூரம் எனும் நான்கு பெண்களுடன் சந்திரன் சேர்ந்து முறையே புதன், வெள்ளி, செவ்வாய் வியாழன், எனும் நான்கு கிரகங்களும் பிறந்தார்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய கிரகங்கள் சந்திரசெலவில் அதன் விம்பத் தொழித்து, ஒளியைக்காலாதுமறைந்து அப்பாற் செல்லுகையிற் றோற்றியதென இவ்வசனம உவமையாய்க் காட்டுகின்றது. மேலும் நுட்பமான கிரகவாக்கியங்களைக் கொண்டு கணக்குப் பண்ணிப் பார்த்தாற் கிறிஸ்துப் பிறக்குமுன், (தசாஉசம்,)ஆ சித்திரைமீ யஎ, தி. புதன் ரோகணிநட்சத்திரத்திலும், மேற்படி அந்தமீ உக தி. வியாழன் பூராடநட்சத்திரத்திலும், மேற்படி ஆவணி மீ. (யகூ)தி. செவ்வாய் பூராடநட்சத்திரத்திலும், (தசாஉரும்,)ஆ ஆவணி மீ (யஅ)தி. சுக்கிரன் மகநட்சத்திரத்திலும் நின்று சந்திரவிம்பத்தில் மறைந்ததென்றும் இவ்வாண்டுக்குப் பின்னாகுதல் முன்னாகுதல் இவ்விதமாய் வேறொரு வருடத்துஞ் சம்பவிக்கவில்லையென்றுந் தெளிவாயறியலாம். ஆகையால மேற்கூறப்பட்டதன் உண்மை விளங்கும்.

உவது. இக்காலப் பகுதியில அதாவது கிறிஸ்துப் பிறக்க முன் (தாஅக) ஆ துவக்கமாய் கணிதசாத்திரிகள் முன்னிலுமநேக காரியங்களை நிதானித்து, (உளசள) வருடமும் (௦) மீ முஞ்செல்ல அயனசலனம, ந பாகையும உய. கலையுஞ் செல்லுகின்றதெனவும் நிச்சயித்து வருடத்தைக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில என ஆறுபருவங்களாய்ப் பிரித்தார்கள். மேலும் இவ்வேளையில வருடத்தைப் பன்னிரு பகுதிப்படுத்தி அவைகளுக்கு நாமங்களிடப்பட்டன. அதெப்படியெனில மேற்குறித்த தாஅக ஆ ஆதித்தன் அவிட்ட நட்சத்திரத்தின் முதற்காலில நின்றபொழுது அமாவாசியையுண்டாய் அதற்குப் யச||| நாளுக்குப்பின் மகநட்சத்திரத்திற் சந்திரன் பூரணசந்திரனாய் நின்றமையால அந்தமாதம மாகமென்றும் (மாசி) மற்றப்பௌரணமியிற் பாற்குனியாகிய உத்திர நட்சத்திரத்தில நின்றமையாற் பாற்குனமென்றும (பங்குனி).

"	"	சித்திரை	"	சைத்திரம் என்னும்	(சித்திரை)
"	"	விசாக	"	வைகாசம் "	(வைகாசி)
"	"	சேட்டையாகிய கேட்டை		சேட்டம் "	(ஆனி)
"	"	பூராட	"	ஆடி "	" "
"	"	சிரவணமாகிய திருவோண		சிராவணம்	(ஆவணி)
"	"	பூரட்டாதி		புரட்டாதி "	"
"	"	அச்சுவினி		ஆசுவினம் "	(ஐப்பசி)
"	"	கார்த்திகை		கார்த்திகை "	
"	"	மிருகசீரிட		மார்க்கசிரம் "	மார்கழி
"	"	பூச	"	பௌட "	தை

பேர்களாயின.

இதனால் மாதத்துக்குப் பேரைக் குறிக்கும் எந்த நூலுமிதற்குப் பின்னொழிய முன்னெழுதப்படவில்லையெனத் தெளிவாயறியலாம.

இவைகள் மாத்திரமல்ல இக்காலவகுப்பிற் கணிதசாத்திரம் இராசமானிபங்கொண்டு நடந்ததென்றும் (தாஎகூ) ஆ. அளவில் பராசிராமர் கணிதசாத்திரிகளைப் பரிபாலித்து அவர்களுக்கு வேண்டிய உதவியொத்தாசைகளையுஞ் செய்துவந்தாரென்றும், அதற்குப்பின்

Digitized by Google

தசரதர், இராமர், இராட்சியபரிபாலனம் பண்ணிவந்த காலத்தில் இச்சாத்திரம் பிரபலியமாய் விருத்தியடைந்ததென்றுங் காண்கிறோம். கிறிஸ்துப் பிறக்க (கூாகூக) வருடத்துக்கு முன் இராமர் உற்பத்தியானாரென்றும், (உக) வயதிற் பட்டாபிஷேகம் பண்ணப்பட்டாரென்றும் இராமாயணத்திற் குறிக்கப்பட்ட கிரகநிலையினாலறியலாம். ஆனாலும் இவ்வேளையில் இவற்றையெடுத்துக் காட்டுகில் விரியுமாதலால் விட்டு விடப்படும்.

ருவது. இந்தக் காலப்பகுதியின் முற்கூறில் அதாவது கிறிஸ்துப் பிறக்குமுன் (கூாகூஅ) ஆண்டில், அயனசலனமிவ்வளவென நிதானித்து அதைக் குறிக்கும்பொருட்டு சத்தரிஷிரேகையெனு நாமமுள்ள வொரு ரேகையை நிறுத்தினார்கள். மேலும் (ருாஎரு) ஆண்டளவிற் கணித சாத்திர விருத்தி அதிகிக்கிரங் கொண்டேறினதெனவும் மகாகீர்த்தி பொருந்திய பராசரமுனி, கர்க்கமுனி எனுங் கணித சாத்திரிகளும், தருமன் முதலிய பஞ்சபாண்டவர்களும் இக்காலத்திலிருந்து கணித பிரபலியத்துக்கடுத்த அனேக முயற்சிகளைச் செய்தார்களெனவும் விளங்குகின்றது. மேற்குறித்த முனிகளும் பஞ்சபாண்டவர்களும் இக்காலத்திலிருந்தார்களென்பதைப் பராசரமுனி அகஸ்திய (Star Canopus) நட்சத்திரத்தின் உதயவனம் அத்தவனம் என்பவற்றைக் குறித்துக் கூறிய வசனத்தினாலுங் கர்க்கமுனி தமது சங்கித நூலெழுதின காலத்திற் கிரகநிலை இன்னதெனக் குறித்துக் காட்டியிருக்கையாலும் ஐயமின்றித் தெளிவாயறியலாம்.

சவது. இக்காலத்திற் பிரதான சங்கதியில்லை.

ருவது. இவ்வேளையில அதாவது (உாசம்) ஆண்டிலிருந்த கணித சாத்திரிகள் தங்கள் காலஒழுங்காய் நான்கு கண்டமாக்கி இக்கண்டங்களின் துவக்கத்தை ஆதித்தனும் வியாழனுங் கூடிநின்ற நாளைக் கொண்டு நிதானித்து அவைகளுக்குக் காரணக்குறியாய் உகங்களெனப் பேரிட்டார்கள். மேலும இவ்வித ஒழுங்குபடச் செய்தவர்கள் காலத்துக்கு நேரே முந்தின உகங் கலியுகம அல்லது முதலயுகமெனவும் மற்றவைகளும் முறையே உம். கம். சம். உகங்களென அர்த்தங் கொள்ளுந் துவாபர உகம் திரேதாயுகம் கிரேதாயுகமென நியத்தினார்கள்.

அதாவது கிரேதாயுகத் துவக்கம் கிறிஸ்துவுக்குமுன் (உஞூாருஉ) ஆ. சித்திரை மீ. ௰கூதி.

திரேதாயுகம்	துளாஉஅ ஆ	ஐப்பசி மீ உஅ திகதி.	
துவாபர யுகம்	சூாக "	புரட்டாதி மீ ௰ரு திக.	
கலியுகம்	ருாசய "	மாசி மீ அ திகதி.	
முடிவு "	உாகூகூ ஆ	ஆனி மீ உகூ திக.	

இவ்விதமாய்க் கிரேதாயுகத் துவக்கம் மோசே சலப்பிரளயமுண்டானதெனச் சொல்லிய ஆண்டுடன் ஒத்துவருதலால் இவர்கள் உலக சிருட்டிப்பைப் பற்றி எவ்வித எண்ணங் கொண்டவர்களாய் இருந்தார்களென விளங்கும்.

சாவது. இக்காலத்தில அதாவது கிறிஸ்துவுக்குப் பின் (சச) ஆண்டளவில கிரகவாக்கியங்கள் பிழை தீர்ந்து தருத்திக கட்டப்பட்டன. இதன் முற்கூறில (ருக) ஆ. கிறிஸ்துவின் பன்னிரு சிஷர்களிலஒருவனாகிய தோமா (Thomas) இந்து தேசத்துக்கு வந்து அவர்கள் உலகசிருட்டிப்பைக்குறித்துக் கூறிய காலத்துக்குமப்பால அனேகவருடங்களுக்குமுன் உலகந்தோற்றியதெனத் திருட்டாந்தப்படுத்திக் காட்டினதினால முன் ஆதித்தனும வியாழனுங் கூடியகூட்டத்தைக் கொண்டு நிதானித்த உகங்களுக்குப் பதிலாக ஆதித்தனுஞ் சனியுங் கூடிய கூட்டத்தைக்கொண்டு நிதானித்த மனுவாந்தரங்களை வைத்து இதனாலஉலக சிருட்டிப்புக்கிறிஸ்துநாதர் பிறக்க (சஞூஉாஉரு) வருடத்துக்கு முன்னென நிச்சயித்தெழுதிவைத்தார்கள்.

எவது. இக்கால வருடபிற் பிரதான சங்கதி நடந்ததாகக் காணப்படவில்லை. இத்துடன பூருவசரித்திரமும் முடிகின்றது.

அபரசரித்திரம்.

அவது. இக்காலத்து (ருாகூஅ) ஆ. பிராமணர் தாங்களே உலகத்தலை முதன்மையான சாதியென்றுந் தங்களிலிருந்தே மற்றுமயாவருந் தோன்றினார்களென்றுங் காட்டும் பொருட்டுப் பூருவ கணிதர் கட்டிவைத்த உகங்கள் மனுவாந்திரங்களெனுங் காலவகுப்புகளுக்குப் பதிலாய் வேறுஉகங்கள் மகாஉகங்கள் மனுவாந்திரங்கள் கற்பங்கள் எனும் அனேக பிரமாண்டமான காலப்பிரிவுகளை வைப்புக்கட்டாய்க் கட்டி முன்னிருந்த நேர்மையான சரித்திரங்கள் யாவையும்மாறி அனேக கட்டுக்கதைகளை அவற்றுட் செருகிக் கிறிஸ்து அவதாரத்தைப்பற்றி முன் கேள்விப்பட்டிருந்ததினால விட்டுணு (Vishnu) பத்தவதாரம் பண்ணினாரென தங்கள் நூல்களிலனேக அவதாரங்களையுங் கட்டிச் சனங்களை வஞ்சிக்கத் தொடங்கினார்கள். மேற்குறித்த கற்ப முதலிய காலப் பிரிவுகளைப்பிரமகுப்த்தன் எனும் பிராமணன் கணக்குப்பார்த்து ஒழுங்கு படக்கட்டினானென்னை இடமுண்டு. ஆனாலும் எவ்விதமாயிவைகளை நிச்சயித்துக் கட்டினானென்பதை எடுத்துக்காட்டிற் பெருகும்.

இதற்குப்பின் (ருகூக) ஆ. சூரிய சித்தாந்தத்தை மயாமுனி அருளிச்செய்தார். இக்காலத்தனும இதற்கு அனேக வருடங்களுக்குமுன்னும் பின்னும்இருந்த கணிதசாத்திரிகள் பூமியுண்டையெனத் திட்பமாகச் சொல்லிவந்தார்கள். மேலும் பூமியின் குறுக்குவிட்டம் (துகூா) யோசனையெனவும் அதன்சுற்றளவு (ருதுநிகூ) யோசனையெனவும் இவர்கள் நிதானித்திருந்தது மாத்திரமலலக் கிரகமண்டலங்களின் சுற்றளவு குறுக்களவு இவ்வளவெனவுங் கணக்குப்பண்ணி வைத்தார்கள். சூரிய சித்தாந்தத்துக்கு வியாக்கியானங் கட்டின நாதபையர் கிரகமண்டலங்கள் இவ்வளவெனக் கணக்குப்பண்ணி எழுதியிருக்கிறார். எப்படியெனில,

சூரியமண்டலம்	ச,கோடியே கக,இலட்சத்து ௰ருது,யோசனை
சந்திரமண்டலம்	க இலட்சத்து உசது யோசனை
புதன்மண்டலம்	௰ இலட்சத்து சகூதுஉாஅ யோசனை
வெள்ளிமண்டலம்	உகூ இலட்சத்து கூசதுகூாகவ
செவ்வாய்மண்டலம்	அக இலட்சத்து சகூதுகூாகூ
வியாழமண்டலம்	ரு கோடியே ௰க இலட்சத்து எருதுவாசச
சனிமண்டலம்	௰உ கோடியே எகூ இலட்சத்து கூஅதுஉாகது.

இதற்குப்பின் ஆரிய சித்தாந்தம். புலத்திய சித்தாந்தம, சோம சித்தாந்தம, சித்தாந்த சிரோமணி, எனும்அனேக நூல்களுந் துலுக்க இராசாவாகிய அக்பார் இராச்சியம பண்ணின நாட்களில் அனேக கள்ள நூல்களுமுண்டாயின.

இப்பொழுது எங்கள் காலத்திலும் ாஅ. கணிதநூலுக்கு மேற்பட விருக்கிறதாகக் காணப்படுகின்றது.

இவ்விதமாய் இந்துதேசத்தவர்களுட் கணிதசாத்திரந் தொடங்கின நாள்முதல் இந்நாள் வரைக்கும் மூவாயிரத்துச் சொச்ச வருடங்களாயினவென்றும் இதுவரைக்குங் கணிதசாத்திரங் கொஞ்சமேனுமில்லா தொழிந்துபோகவிலலையென்றுங் காண்கிறோம். இக்காலத்திலுங் கணித சாத்திரத்திற் றேறின பலருண்டேனும் இராசமானமான நடையில்லாததினால அனேகர் முன்னோர் கூறிய வசனத்தைக் கொண்டாள்பவரேயனறித் தாங்களாய் யாதொன்றைக் கூட்டவாதல் குறைக்கவாகுதல் அறியாதவர்களாய் அவர்கள் கட்டிவைத்த சூத்திரங்களின் நியாயமின்னதெனத் தெளியாதிருக்கிறார்கள். ஆகிலும் ஐரோப்பைதேசத்தவர்களின் கணிதசாத்திரத்தைக் கொண்டு தங்கள் சாத்திரத்தின் நியாயங்களை விளங்கி அதின் குற்றங்களை நீக்கிப் புதுவகணித சாத்திரிகளிலும் பதின்மடங்கு தெளிவுகொள்வார்களென்பது சமசியமின்றி உறுதியாய்ச் சொலல இடமுண்டு. ஆகையாற் கணித சாத்திரத்திலேற்பட்டிருக்கும் எவர்களும் அச்சாத்திரப் பயிற்சியிற்றெளிவு கொள்ளவும் அச்சாத்திரம் விருத்தியடையவும் பிரயத்தனஞ் செய்வது அவர்கள் கடன்.

இலக்கண களஞ்சியம்.

[On Tamil Grammar.]

கனம்பொருந்திய மூசாமைக்காரரே, கற்றோரிலக்கணங்களைக் கனமாகக் கொள்வார்களென்று வந்தனஞ்செய்து சில விதிகளெழுதத் துணிவுற்றேன்.

(வீரசோழியம்-சந்திப்படலம்-உ௰க-கவி.)

ஐம்மூன் றதாமுடல் வன்மையின்வந்திடலாறெடைந்தா
மெய்ம்மாண்பதா நவ்வரின் முன்பழிந்து பின் மிக்கணவ்வா
மம்மேல்வரினிருமூன்றுமுடன் மற்றியல்புசந்தி
தமமா சகலங்கெடப்பிக்களாமென்ப தாழ்குழலே.

இதன்பொழிப்புரை, பதினைந்தாமெய்யாகிய-ழகாரத்தின்பின் வல்லினம்வந்தால்-அது ஆறுமெய்யாகிய-ணகாரமும்-ஐந்தாமெய்யாகிய டகாரமுமாகும். வரலாறு. பாழ்-செய், பாண்செய்-பாழ்செய் பாட்செய் எனவரும். அந்த ழகாரத்தின்பின் நகாரம்வந்தால் நிலைமொழியீறழிந்துவந்த நகாரம் ணகாரமாகும். வரலாறு வாழ் நாள் வாணாள் எனவரும். அன்றியும் அந்த ழகாரத்தின்பின மகாரம்வந்தால ழகாரம் ணகாரமாகும். வரலாறு முகிழ் முலை முகிண்முலை எனவரும். தாழ்குழலென்றது மகடூஉமுன்னிலை. மொழிக்கு முன்வருஞ் சிறப்புப்பற்றி மாண்பமைந்த நவ்வென்றார். மொழிமுதனகரம ஒருசுழியாகையாலும் ஈற்றுனகரம் இருசுழியாகையாலும் முச்சுழிணகரமென்றதோவுமிக்கணவ்வென்றார். மற்றென்றதபிறிதுப்பொருட்டு. இவற்றுதாரணக்கவிகள்.

Digitized by Google

(தேம்பாவணி நாட்டுப்படலம் ௬௰௧. கவி.)
பகைதீர்ந்து சண்டகத்திற் றண்ணிழற்கீழ்ப் பன்னிவர
மிகைதீர்ந்து புறத்தெவர்க்கும் வேட்கைசெயு நாடிதுவே
வேட்கைசெயு நாடிதுவேல் விரிகாலத்திமிழ்குன்று
வாட்கை செயுநிலைமையுள்ள வானுலகநாடேமோ.

ஆசெதுகை வெண்பா.
அந்தரத்துள்ளே யகங்கை புறங்கையாம்
அந்தரமேபோலுமனைவாழ்க்கை அந்தரத்து
வாழ்கின்றேமென்று மகிழன்மின்வாளுளும்
போகின்ற பூளையே போன்.

(காரிகை ஒழிபியல் முதலாங்கவி.)
சீருந் தளையுஞ் சிதைபிற் சிறியஇஉஅளபோ
டாருமறிவரலகுபெறுமை ஐகாரநைவேல்
ஒருங்குறிவியலொற்றளபாய்விடினேரலகாம்
வாரும்வடமூந்திகழுமுகிண்முலை வாணுதலே.

இவற்றுள் முறையே வாழ்க்கை வாட்கை எம். வாளுள் எம். முகிண்முலை எம். இவ்வாறு சிறுபான்மை வருவனவற்றை அவ்வாறுபகுத்துப் பயன் கொள்க.

(தொன்னூல்விளக்கம் ௱௰௪ சூத்திரம்.)
எதிர்மறை யேவற்கேலேயலலே, யன்மோவற்க வாகுமொருமை,
யாமினன்மினற்பீர்பன்மை.

இதன் பொழிப்புரை, ஏல் அல் அன்மோ அற்க இவ்விகுதிகளெதிர்மறையேவலொருமைக்காகும். வரலாறு. செய்யேல் செய்யல் செய்யன்மோ செய்யற்க எனவரும். ஆமின் அன்மின் அற்பீர் இவ்விகுதிகளெதிர்மறையேவற்பன்மைக்காகும். வரலாறு செய்யாமின் செய்யன்மின் செய்யற்பீர் எனவரும். சூத்திரத்துள் ஆகுமென்றமிகையால அற்கவென்னும் விகுதி மூவிடத்தும் ஐம்பாற்கும் வருமென்பதுபெற்றும். வரலாறு. நான் சொலலற்க, நீபொய்யற்க, அவன்வழுவற்க, அவள்செய்யற்க, அவர் நடவற்க, அதுவஞ்சுகறக, அவையொழிகற்க எனவரும். இவை வியங்கோளெனினுமமையும்.

(சிந்தாமணி கேமசரியாரிலம்பகம்,௱௬. கவி.)
துனசிறடி கோவநடந்து செலேல்
எனதாவியகத்துறைவாயெனுநீ.

(குறள் நட்பாராய்தல்,௮ம். கவி.)
உள்ளற்கவுள்ளஞ்சிறுகுவ கொள்ளற்க
வலலற்கணுற்றறுப்பார் நட்பு.

(குறள் படைச்செருக்கு முதலாங்கவி.)
என்னைமுனனில்லன்மின்றெவ்வீர் பலரென்னை
முனைனின்று கன்னின்றவர்.

மற்றவற்றிற்குமிவ்வாறு வருமுதாரணங்கள் காண்க.

(தொன்னூல்விளக்கம் ௮௰௭, சூத்திரம்.)
எதிர்மறைப் பகுபதத்தியைந்த மொழிமுத, லொற்றெனிலவ்வுமுயிரெனிலன்னு மிருமைக்கா நிருவெனவடநடையே.

இதன்பொழிப்புரை வடநடை எதிர்மறைப் பகுபதமொழிமுதற்கண் ஒற்றளவாயின் அவ்வும உயிரளவாயின் அந்நும் இருவகைமொழிக்கு நிருவும்புணர்ந்து பொருளின்மையும் பிறிதும் எதிர்மறையுங்காட்டும. வரலாறு, நீதியின்மை அநீதி எம். ஆதியின்மை அநாதி எம். நாமமில்லான் நிருநாமன் எம். உவமையில்லான் நிருவுவமன் எம். வரும, பிறவுமன்ன.

(நேமிநாதம் வெண்பா, ௰௬. கவி.)
சேர்ந்தமொழிப்பொருளை நீக்கவருநகரஞ்
சார்ந்ததுடலாயிற் றன்னுடல்போஞ் சேர்ந்ததுதான்
ஆவியேற்றன்னுவி முன்னாகும ஐஒளவா
மேவியஏஒவும விரைந்து.

(வீரசோழியம் சந்திப்படலம், ௰௬. கவி.)
சொன்னமொழிப்பொருணீக்கு நகாரமச் சொன்முன் மெய்
மேல்-அக்கிலையாகவுடல்கெடு மாவிமுன்னுகிலது
தன்னிலைதோற்றிடு மேயோவிரண்டுந்தனிமொழிமுன்
மன்னியஐஒளவுமாகும் வடமொழிவாசகத்தே.

இவ்விரண்டுமேற்கோளெனக்காண்க. அநுசாரமென் றீற்றனகாரமாகக் கூறுவாருமுளர். இவ்வாறேமேற்சொல்லியஇலக்கணத்தொகையெல்லாம் வகை வகையாகக் காட்டுதும்.

இப்படிக்கு
தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார்.

பஞ்ச தந்திரக் கதை.

மித்திரபேத தந்திரம், ௱உ௮ம். பக்கத்தினின்று.

துஷ்டபுத்தி, சுபுத்தியென்று இரண்டு செட்டிப்பிள்ளைகள் பணஞ் சம்பாதிக்கிறதற்காகத் தேசாந்தரம் போனார்கள். அவ்விடத்திற் சுபுத்திக்குப் பூமியில் ஒரு பணப் படையல் அகப்பட்டது. அதைச் சிநேகத்தினாலே துஷ்டபுத்தியுடனே சொல்ல அத்துஷ்டபுத்தி அத்திரவியத்தை இங்கே புதைத்து வைத்துவிட்டுக் கொஞ்சப் பணம் எடுத்துக்கொண்டு போவோமென, சுபுத்தி சிநேகத்தினால் அதற்குச் சம்மதித்துப் பிறகு அதிற் கொஞ்சப் பணம் எடுத்துக்கொண்டு மற்றைப்பணத்தை ஒரு மரத்தடியிற் பள்ளந் தோண்டி அதிலே புதைத்து வைத்துப் பின்பு வீட்டுக்குப் போய்ப் பழயபடியே சிநேகமாய் இருக்கையில் ஒரு நாள் துஷ்டபுத்தி தனியே போய் அந்தப் பொருளை எல்லாம் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான். பிறகு சிலநாட் கழித்துத் துஷ்டபுத்தி சுபுத்தியைப் பார்த்து, அந்த நம்முடைய திரவியத்தைக்கொண்டு வருவோமெனப், பின்பு இருவரும்போய் அந்த இடத்திற் பார்க்குமளவில் அங்கு ஒன்றும் இல்லாமையாற் துஷ்டபுத்தி மிகவும் வருத்தத்தோடு சுபுத்தியைப் பார்த்து இங்கு இருந்த பணத்தை நீயே கொண்டு போனாய். மேலுங் கபடமாய் வருத்தப்படுகிறுயென்று சொல்லிக் கலகப்பட்டிதை இராசாவுக்கு அறிவித்தான். பிறகு இராசா, நீதிபதியை அழைப்பித்து இதைப் பஞ்சாயத்திற்றீர்க்க வேண்டுமெனக் கட்டளையிட, அவன் ஐந்துநாளைக்குள்ளே தீர்த்துப்போடுகிறேனென்று இராசாவின் முன்னே கெடுவைத்துக்கொண்டு வந்து பஞ்சாயத்துக்கு ஆரம்பித்தான். அப்போது துஷ்டபுத்தி யெனக்குச் சாட்சியிருக்கிறது. அந்தச்சாட்சியை இப்போதே கேட்கலாமென, பஞ்சாயத்தார் உன் சாட்சியைக் கொண்டுவாவென, பின்பு துஷ்டபுத்தி வீட்டுக்குப் போய்த் தன் தகப்பனுடனே சொல்லுகிறான். அப்பா, உன்னுடைய ஒரு பேச்சால் எனக்குப் பதினாயிரம வராகன் வரைக்குங் கிடைக்குமென, அப்போது கிழவன் எப்படிக் கிடைக்குஞ் சொல்லென, துஷ்டபுத்தி நீர் மரப்பொந்தில் இராத்திரிக்குப் போய் உட்கார்ந்திருக்கவேண்டும். அங்கே நீதியதிபதி முதலானோர் வந்து அங்கிருந்த பணத்தை ஆர் கொண்டுபோனார்கள் என்னும்போது நீர் சுபுத்திகொண்டுபோனானென்றால் என் காரியமாகுமென, இதைக் கேட்டுப் பிதாச் சொல்லுகிறான். பொல்லாங்கு நேரிடுகிற காரியத்தைப் பண்ணிச் சுகமடையவேண்டுமென்று இச்சிக்கிறது, கொக்கைப்போல மூடத்தனமாயிருக்கின்றதென, துஷ்டபுத்தி அதெப்படியெனப் பிதாச் சொல்லுகிறான்.

தான் பொரிக்கிற குஞ்சுகளை எல்லாம் ஒரு பாம்பு தின்னப் பறிகொடுத்துக்கொண்டு வருகிற ஒரு மூடக் கொக்கு, அப்போதுபொரித்த தன் குஞ்சுகளைக் காப்பாற்றுகிறதைக் குறித்து என்னசெய்யலாமென்று பெண் கொக்கோடு கூட ஏரிக்கரையில உட்கார்ந்து ஆலோசித்துக்கொண்டிருக்கையில, அக்கொக்கின் சிநேகிதனாகிய குளிரனென்னும் பெயரையுடைய நண்டானது கொக்குகளைப் பார்த்து இன்றைக்கு ஏன் நீங்கள் வியாகுலமாய் இருக்கிறீர்களென, அவர்கள் தங்கள் விருத்தாந்தங்கள் எலலாவற்றையுஞ் சொலலக் குளிரன் அதைக்கேட்டு, ஆண் கொக்கைப் பார்த்து நலலது உனக்குப் பாம்பைக்கொலலுகிற உபாயம் ஒன்று சொலலுகிறேன். என்னவென்றால், கீரிப்பிள்ளையின் வளை முதற்கொண்டு பாம்பு இருக்கும் இடம்மட்டும மீன்களைப் பரப்பிவைத்தாற் காரியஞ்சித்தியாகுமென்றது. பிறகு கொக்கு அப்படியே செய்யக் கீரிப்பிள்ளை தன் வளையினின்றும் புறப்பட்டு மீன்களைத் தின்றுகொண்டே போய்ப் பாம்பையுங் கடித்து எறிந்து விட்டுக் கொக்கின் குஞ்சுகளையுஞ் சாப்பிட்டது. ஆகையால இப்படிப்பட்ட ஆலோசனைபண்ணலாகாதென, துஷ்டபுத்தி பிதாச் சொன்னதைக் கேளாமல் அவனை வலுவிலிழுத்துக்கொண்டுபோய் மரப் பொந்தில உட்காருவித்து, விடியற்காலத்தில நீதியதிபதி முதலாகிய பேரையுஞ், சுபுத்தி முதலானோரையும் அவ்விடத்துக்கு இட்டுக்கொண்டுபோய்ச் சாட்சி இந்த மரத்தைக் கேளுங்களென்றான். அப்போது அந்த மரத்தில இருந்து இங்கிருந்த பணமெல்லாஞ் சுபுத்தியே கொண்டுபோனானென்றொரு சத்தம் புறப்பட்டது. அப்போது சுபுத்தி இதெனனமோ மோசமாயிருக்கிறது. இங்கே ஒரு பிராணியும் இலலாமற் தொனி எங்கே இருந்து உண்டாயிற்று. இது தெய்விகமாய் இருந்தால் மெய்யல்லோ சொல்லவேண்டுமென்றிப்படித் தனக்குள்ளே எண்ணமிட்டுக்கொண்டு, அந்த மரத்தின்மீதேறிச் சோதிக்கையில், அதில் ஒரு பொந்து காணப்பட்டது. உடனே இங்கே கிருத்திரமம் இருக்குமென்றெண்ணி அங்கே வெருட்டை மூட்டிப் பற்றவைத்தான். பின்பு உள்ளே இருந்த கிழவன் பா

Digitized by Google

தி வேகிற மட்டும் பல்லைக் கடித்துக்கொண்டு இருந்து, பொறுக்கப் போகாமல் அலறிக்கொண்டு வெளியே வந்து விழுந்தான். அப்போது அங்கிருந்தோர் எல்லாரும் இதென்ன விதமெனக் கேட்க, கிழவன் என் பிள்ளை துஷ்டபுத்தி கபடத்தினால் என்னைப் பலாத்காரமாய்க் கொண்டுவந்து இங்கே வைத்தானென்று சொல்லி இறந்துபோனான். நீதிபதி இதைப் பார்த்து இராசாவுக்கு விண்ணப்பம்பண்ண, பிறகு துஷ்டபுத்தி வாயினாலேயே இராசா எலலாம் அறிந்துகொண்டு அவனைக் கழுவில் ஏற்றினானென்று சொல்லிப், பின்னுங் கரடகன் தமனகனைப் பார்த்துப் பாம்பை வெகு நாள் வளர்த்தாலும் அது எப்படியும் வளர்த்தவனையுங் கடிக்கும். ஆகையால் எனக்கு உன்னிடத்திற் பயந் தோன்றுகின்றது. இனிமேல் உன்னிடத்திற் தேவதத்தனை போல நடந்துகொள்ள வேண்டுமென, அதைக் கேட்டுத் தமனகன் தேவதத்தன் எப்படி நடந்துகொண்டான் சொல்லெனக் கரடகன் சொல்லுகின்றது. (இன்னும் வரும்)

PANCHA-TANTRA-KATEI.

[A Translation &c.—Continued from page 129.]

Two Chitty children, called Tushdapooty and Supooty went abroad to acquire money. As they were going along, Supooty happened to find a treasure, and on informing Tushdapooty thro' friendship, he advised him to take only a small part of it and bury the remainder under ground.

Accordingly Supooty took a small part of it, and buried the remainder at the foot of a tree, and confiding in Tushdapooty's friendship, staid at home quietly.

One day, Tushdapooty went alone, and dug up the treasure and came home. A few days after, Tushdapooty said to Supooty "Come let us go now and dig up our treasure." So saying, they both hastened to the spot, and not finding the treasure, Tushdapooty with apparent regret addressed Supooty thus; "It is you that stole the treasure. You affect to be sorry."

So saying, he went and complained to the king who sent for the Judge, and ordered him to have the matter inquired into by the council; upon which the Judge requested to be allowed five days for calling the assembly together.

When the assembly was convened Tushdapooty said, "I have witnesses who must be heard;" upon which, the council ordered him to bring his witnesses.

He then ran home and said to his father thus; Abbah, "I can gain 10,000 pagodas by means of a word of your's."

"How?" said the old man. Tushdapooty then said, "Go and conceal yourself in the cavity of a tree and when the Judge and others ask, "Who carried the money?" you reply, "Supooty did; "then I will succeed.

The father hearing this, said, "An attempt to reap benefit from a dangerous course will engender evil as did the folly of the Stork."

"How was that," demanded Tushdapooty. The father related thus:

"A foolish stork who had the misfortune to have all her young ones devoured by a serpent, was once sitting on the bank of a river with its mate, and counseled with her how they could preserve their young."

In the mean time, there came a Crab of the name of Kooleran, who asked the storks why they were sad; and they related their circumstances.

Kooleran hearing this, said to the male stork, "very well," "I will teach you a device to kill the serpent." "Strew fishes along in a line from the hole of a mangoose to that of the serpent." This being done, the mangoose started from his hole, went along eating the fishes, killed the serpent and the young ones of the stork also.

"Therefore," said the old man "it is not wise to have recourse to such a plan." But Tushdapooty would not listen to the advice of his father, but thrust him by force into the cavity of the tree.

The next morning, he took the judge and his men, and Supooty and his men to the tree and pointed to it as being his witness and desired that it should be heard.

Then came a voice from the tree saying that Supooty himself had taken all the money.—Supooty exclaimed "This is somewhat disastrous. If this voice is divine, it must express the truth." While thus contemplating he climbed the tree and on searching it, found a cavity in it.

Accordingly, supposing there was some deception, he kindled a fire in the cavity.

The old man who was within, bore the heat patiently until he was half dead, when his sufferings being too great, he screamed aloud and jumped out.

"How is this?" exclaimed they all. The old man said, That Tushdapooty put him there by force, and then he expired.

The Judge reported to the King the circumstances of the case who caused Tushdapooty to be impaled.

Having related this story, Karadacan said to Tamanakan, "A serpent, tho' tamed, bites the master himself. Therefore I apprehend evil. I must therefore behave like Tavatatan."

"How did Tavatatan behave?" asked Tamanakan, to which Karadacan replied thus. [To be continued.]

ஆய்ந்தோய்ந்து பார்த்தலறிஞர் பேருமை.

A Tartar King and a Dervise.

[An Anecdote.]

தாத்தாரி தேசத்தையாண்ட ஓர் இராசா தன் மந்திரிமார் பி
தானிகளுடனே கூடிக்கொண்டு நகரி சோதனை பார்த்து வரும்பொ
ழுது, ஒரு பண்டாரத்தை வழியிலே கண்டார். அவன் தெரு
க்கோறுஞ் சுற்றித்திரிந்து நூறு பூவராகன் கொடுப்பவர்களுக்கு ஒ
ரு சிறு உபதேசம் பண்ணுவேனென்று கூறிக்கொண்டு வந்தான். இ
ராசா இதைக் கேட்டவுடனே அவ்வளவு தொகையான பணத்தை
ம் பண்டாரத்துக்குக் கொடுக்கும்படி தன் அரண்மனைப் பொக்க
க்காரனுக்குக் கட்டளையிட்டார். பண்டாரம் நூறுவராகனையும் வா
ங்கிக்கொண்டு "ஆய்ந்தோய்ந்து பாராமல ஒன்றையுஞ் செய்ய முயல
தே" என்னும் வாக்கியத்தை ஒரு சீட்டில வரைந்து கொடுத்தான்
இவ்வாக்கியத்தை மந்திரிமாரும் பிரதானிகளுங் கேட்டவுடனே பு
ன்னகைகொண்டு, "பண்டாரஞ் சொன்னதற்குப் பலனுஞ் சரி" எ
ன்று பரிகாசம்பண்ணினார்கள். ஆனாலும் இராசன் அவ்வாக்கியத்தை
வாசித்தவுடனே, தன் அரண்மனை, மாளிகை, மாட கூடங்கள் சித்தி
ச் சாவடிகளெங்கும் பொன்னெழுத்துக்களாற் சித்திரிக்கும்படி பண்
ணுவித்தான். கொஞ்சக் காலத்தின் பின் இராசாவுக்குச் சற்றே சு
ணவீனமாய் இருப்பதை அவருடைய பகைஞரிற் சிலர் கேள்விப்பட்
டு இராச ரணவயித்தியனை அழைத்து நீ போய் இராசாவுக்கு இ
ரத்தங் குத்தி வாங்குகையில் நஞ்சு தடவின கட்டியினால் இராசாவை
கொன்றுபோட்டுவாவென்று கைக்கூலியும் பொருந்தி அனுப்பவி
த்தார்கள். அப்படியே ரணவயித்தியன் கைக்கூலியும் வாங்கிக்கொ
ண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு இராச அரண்மனை வாச
ற் போய் நின்றான். வயித்தியன் வந்த செய்தியை அரண்மனையா
அறிந்தவுடனே இராசாவுக்குப் போய்ச் சொன்னார்கள். இராசா அ
ழைத்து வரும்படி ஆளனுப்பினார். இராசாவின் வாசல்தவா
ச் சேவகர் வந்து வயித்தியனை இராசாவண்டைக்கு அழைத்துப்போ
னார்கள். வயித்தியன் இராசாவுடைய கையைப் பிடித்துப் பார்த்த
உமக்குச் சற்றே குறைவீனங்கண்டிருக்கிறது. இரத்தங் குத்திவ
ங்கினாற் சுகமாவீரென்றான். இராசா அவனைப் பாாத்து அப்ப
யே ஆகட்டுமென்றார். உடனே வயித்தியன் இராசாவுடைய கால்க
ளையுங் கைகளையுங் கட்டிக்கொல்லுமாயுதத்தையும் நஞ்சு தடவி
கையிற் பிடித்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்த பொழுது, இராசா
ன் உள்மாளிகையிலே "ஆய்ந்தோய்ந்து பாராமல் ஒன்றையும் மு
லாதே"என்னும் வாக்கியஞ் சித்திரித்திருப்பதைக்கண்டான்.உடனே
திகைத்து அவ்விடத்தை விட்டோடிக் கையிற் பிடித்திருந்த ஆயுத
தையும் நழுவவிட்டுக்கலங்கியோடினான். இராசா அவன் தடுமா
யோடுவதைக் கண்டு, கூப்பிட்டு என்ன காரியமென்று விசாரித்தா
அப்பொழுது ரணவயித்தியன் இராசாவுக்கு முன்பாக வந்து சாஷ்
டாங்கமாய் விழுந்து கும்பிட்டு, அவரைத் தழுவிக்கொண்டு, அழு
கண்ணீருடனே அவரை நோக்கி, இராசாவே, இன்னவின்ன விதம
க உமக்கு விரோதமாகச் சதிசெய்ய எண்ணி வந்தேன். இப்பொ
ழுது இவ்வாக்கியத்தைக் கண்டவுடனே கலங்கியோடினேனென்ற
ல்லாக் காரியத்தையும் வழுவறச் சொல்லி அழுத கண்ணீருடனே மு
ழங்காலில் நின்று மன்னிப்புக் கேட்டான். இராசா அவனுக்கு மன்
னித்துத் தனக்கு விரோதமாகச் சதியோசனை பண்ணின பகைஞரை
ச் சிரசு சேதம்பண்ணி வரும்படி தன்னுடைய தலையாரிமாரை அனு
ப்பிக் கொலலுவித்தார். மறுபடி இராசன் தம்முடைய மந்திரிமா
ரையுங் கோட்டுப் பிரதானிகளையும் பார்த்து, ஓய் பிரதானிகளே! நீ
ங்கள்முன் அவ்வாக்கியத்தைக்கேட்டவுடனே புன்னகைகொண்டு விக
டிதமாய்ப் பேசினீர்கள். ஆனாலும் ஒரு இராசனுடைய சிவனைக்காத்
த வாக்கியத்துக்கு எவ்வளவு பொன்திரவியங் கொடுத்தாலும் போ
தாதெனச் சொல்லிக் கடிந்துகொண்டார்.

தெளிதல்.

பிரியமானவர்களே, நீங்களும் நன்மையான அல்லது தீங்கான யாதொரு காரியத்தைச் செய்யமுயலுவதற்கு முன்னே அதின் பெறுபேற்றை ஆய்ந்தோய்ந்து பார்ப்பது அவசரமாய் இருக்கின்றது. ஆகையால் ஆய்ந்தோய்ந்துபார்ப்பவர்களே ஞானவான்கள்.

Printed and published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.—Edited by Henry Martyn and Seth Payson.

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

சஞ்சிகை. ௰௪.] ௲அ௱௪௧ ௵. ஆடி. ௰௫. திகதி. வியாழக்கிழமை. Thursday, July 15, 1841. [No. 14.

எல்லாச்சாதிகளையும மேசியாவின் இராச்சியத்துக்கு வரவழைத்தல்.

எசாயாவின் தீர்க்கதரிசனம், ௫௫. அதிகாரம்.

[A call to faith and repentance, with the blessings annexed to obedience.—Isa. 55th Chap.]

ஓ! தாகமாயிருக்கிற நீங்கள் எல்லாருந் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து கொண்டு சாப்பிடுங்கள். நீங்கள் வந்து பணமுமன்றி விலையுமன்றித் திராட்சப்பழ இரசமும் பாலுங் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமில்லாததிலே பணத்தையுந் திருத்தியாகாததிலே உங்கள் பிரயாசத்தையுஞ் செலவழிப்பானேன்? நீங்கள் நமக்குச் செவிகொடுக்கவே கொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள். அப்போது உங்கள் ஆத்துமங் கொழுப்பானதினாலே மகிழ்ச்சியாய் இருக்கும். உங்கள் செவியைச் சாய்த்து நம்மண்டைக்கு வாருங்கள். கேளுங்கள், அப்போது உங்கள் ஆத்துமம் பிழைக்கும். எனெனில் தாவீதின் நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாய் உடன்படிக்கைபண்ணுவோம். இதோ, அவரைச் சனக்கூட்டங்களுக்குச் சாட்சியாகவுஞ், சனசதளங்களுக்குத் தலைவராகவும் அதிகாரியாகவுங் கொடுத்தோம். இதோ, நீ அறியாதிருந்த சாதியை வரவழைப்பாய். உன்னை அறியாதிருந்த சாதி உன் தேவனாகிய யெகோவாவின் நிமித்தமும் இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தியமும் உன்னண்டைக்கு ஓடிவரும். எனெனில் உன்னை மேன்மைப்படுத்தினார்.

யெகோவா கண்டுபிடிக்கையில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ஆகாதவன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு யெகோவாவண்டைக்கு மனந்திரும்பக்கடவான். அப்போது அவன்மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனண்டைக்கே மனந்திரும்பக்கடவான். எனெனில் அவர் மன்னிக்கிறதற்குத் தயவுபெருத்திருக்கிறார்.

எனெனில் நம்முடைய நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல, உங்கள் வழிகள் நம்முடைய வழிகளுமல்லவென்று யெகோவாசொல்லுகிறார். எனென்றாற் பூமியைப்பார்க்க வானங்கள் எப்படி உயர்ந்திருக்கின்றதோ, அப்படி உங்கள் வழிகளைப்பார்க்க நம்முடைய வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்க நம்முடைய நினைவுகளும் உயர்ந்திருக்கின்றன. அதேதென்றால் மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்திறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல், பூமியையே நனைத்து, அதை முளைகிளம்பவும் விளையவும்பண்ணி, விரைக்கிறவனுக்கு விரையையுஞ் சாப்பிடுகிறவனுக்கு ஆகாரத்தையும் எப்படிக் கொடுக்குதோ, அப்படிநம்முடைய வாயிலிருந்து புறப்படும் வசனமுமிருக்கும். அது வெறுமையாய் நம்மண்டைக்குத் திரும்பாமல் அது நாம் விரும்புகிறதைச் செய்து, நாம்அதை யனுப்பினகாரியமாகும்படியாக வாய்க்கும். அதேதெனில் நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டுச்சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள். பருவதங்களும் மேடுகளும் உங்களுக்கு முன்பாகக் கம்பீரமாய் முழங்கி வெளியின் மரங்களெல்லாங் கைகொட்டும். முட்செடிக்குப்பதிலாகத் தேவதாரி மரவிருட்சம் முளைக்குங், காஞ்சொறிக்குப் பதிலாக முறுதுச்செடியெழும்பும், அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும் நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.

[On the benefits derived from the Missionaries.]

முகாமைக்காரரே,

ஐரோப்பாக் கண்டத்தவர்களைப் போல் எங்கள் தேசத்தவர்களும் பலவித அறிவுந் தேறவேண்டுமென்கிற நல்விருப்பங்கொண்டு நீங்கள் உதயதாரகையென்னும் இவ்வகைப் பத்திரங்களைக் காலத்துக்குக் காலம் அச்சடிப்பிக்க முயன்றதே மிகுந்த நன்மை. உங்கள் இம்முயற்சிக்கு உதவிக்காரராகவும் மற்றும் நீங்கள் பெற்ற அனுபவித்து வருஞ் சகலசலாக்கியங்களுக்குங் காரணராகவும் இருக்கும் குருமார் எங்களூரவர்களுக்குச் செய்துவரும் நன்மையைப்பற்றி நான் எழுதுங் காரியத்தைத் தயவுபண்ணி உங்கள் உதயதாரகைப் பத்திரத்திற் பதிப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது இற்றைக்கேறக்குறைய இருபத்தைந்து வருஷத்துக்குமுன் எங்கள் தேசம் இருந்தவிருக்கைக்கும் இப்போதிருக்கிறவிருக்கைக்கும் எவ்வளவு வித்தியாசம். முன் எங்களூரவர்களில் அனேகர் எழுத வாசிக்கத்தானும் அறியாதவர்களாய் இருந்தார்கள். இதுமுதலான பலவித அறியாமைகளுக்கும் அவை காரணமாகவுண்டாகும் திற்பந்தங்களுக்கும் எங்கள் தேசத்தவர்களுட்பட்டிருந்ததை இந்தப் பாதிரிமார் அறிந்து எங்களூரவர்கள்மேல் இரங்கி எறக்குறையப் பன்னீராயிரங் கட்டைதூரமாகிய தங்கள் சென்மதேசத்தையும் உற்றுறவு முறையாரையும் நிலமையுடைமைகளையும்விட்டுவெறுத்துத் தாங்கள் நித்ருதிலேயே அவைகளென்றெண்ணி இங்கேவந்து ஊருக்கூர் பள்ளிக்கூடங்களை வைத்துப் போதித்து வருகையில் வட்டுக்கோட்டையிற் சாத்திரப் பள்ளிக்கூடமொன்றைத் தாபித்தார்கள். இதிற்பிள்ளைகளைச் சேர்ப்பித்துப் படிப்பிக்கிறதற்குக் (கரும்புதின்னக் கூலி கொடுத்தாற்போல்) அன்னவஸ்திர முதலானவைகளையுங் காசுபணங்களையுங் கொடுத்து இங்கிலீசையுந் தமிழையும் அதனதனிலக்கிய விலக்கணங்களோடு படிப்பித்து வருகிறார்கள். இவ்விதமாகப் படிப்பித்து வருகிறதினாலும் எங்களூரவர்களுக்கு இவர்கள் நாளுக்குநாட் சொல்லிவருகிற புத்திபோதனையினாலும் மற்றும் இவர்களுடைய பலவித செய்கைகளினாலும் எங்கள் தேசத்தவர்கள் முன்கொண்டிருந்த அறியாமையையும் முரட்டுக் குணங்களையும் ஒழுங்கற்ற உடைநடை பாவனையையுந் தள்ளியறிவுடையவர்களுஞ் சீர்திருத்தினவர்களும் ஒழுங்கான நடையுடை பாவனை உள்ளவர்களுமானார்கள். இதுவன்றி இந்தச் சாத்திரப் பள்ளிக்கூடத்தில் தேறினவர்களில் அனேகர் முன் எவ்விதமாயிருந்தாலும் இப்போ பலபலவிடங்களிலும் பலபல உத்தியோகங்களில் ஏற்பட்டு அதிகசம்பளங்களைப் பெற்றமிகுந்த செல்வத்துடனேயுஞ் சங்கையுடனேயும் வாழ்ந்திருக்கிறார்கள். அன்றியும் இவர்கள் மூலமாகவும் அனேகர் நன்மையிற் சிறந்தவர்களாய் நான் விட்டுவருகிறார்கள். இவ்விதமாகவே இந்தப் பாதிரிமாரிடத்தில் அளவற்ற நன்மையடைந்தவர்களிற் சிலர் அவர்களுக்கு நன்றியற்றவர்களும்

Digitized by Google

விரோதிகளுமாயிருக்கிறதை அறிந்திருந்தும் அப்படிப் பட்டவர்கள் நிமித்தம்மனம்வெறுத்துத் தங்கள் நற்செய்கைகளில் இளக்கரித்துப் போகாமல் இன்னும் அவர்களுக்கும் நன்மைசெய்து வருகிறார்கள். முன் இப்படிப்பட்ட நன்மைகளை எங்களூரவர்களுக்கு ஆர்செய்தார்கள்? இவ்விதமாகவே எங்களூரவர்களை அமிழ்த்தியிருந்த அறியாமை என்னும் இருளையும் அதுகாரணமாகவுண்டாகும் பலவித நிற்பந்தங்களையும் நீக்கி அறிவாளிகளாயுஞ் செல்வர்களாயும் மற்றுஞ் சொல்லப்படுஞ் சகலசலாக்கியங்களுக்குந் தகுதியுள்ளவர்களாயும் வரப்பண்ணின குருமாருக்கு நாங்கள் என்ன கைமாறு செய்வோம். ஆகையால் இவர்கள் எங்களுக்குச் செய்துவரும் எண்ணிறந்த நன்மைகளுக்காகவும் எங்களை அறிவாளிகளாக்குகிறதற்கு எங்கள் நிமித்தம் இவர்கள்படும்பிரயாசத்துக்காகவுஞ்சருவகாரணகடவுள் இவர்களுக்கு ஆயிரமடங்கு கைமாறுசெய்து இவர்களுக்கும் இவர்கள் சந்ததியாருக்கும் நீடிய ஆயிசுவையும் மட்டற்ற ஐசுவரியத்தையும் மற்றும் பெறும் பேறுகளையுங் கொடுத்து அனுக்கிரகஞ் செய்வாராக.

முகாமைக்காரர் வசனம்.

மேலே கண்டிருக்கிறபடி குருமார் இத்தேசத்தாருக்காகச் செய்துவரும் நன்மைகளைப் பற்றித் தம்பையாப்பிள்ளையைப் போலப் பிறரும் நல்லுணர்வும் நன்றியறிதலுமுள்ளவர்களாய் இருப்பார்களேயானால், எங்கள் சாதியாருக்கு மிகுந்த கீர்த்தியும், தேசத்திற்கு மெய்ப் பலனுமுண்டாகிறதுமாய் இருக்கும். ஆனாலும் யாவரும் அப்படிப்பட்ட உணர்வைக்கொண்டு அதற்கு இசைய நடந்தவர்தாற் சொல்லி முடியாத பாக்கியத்தை அடையக் கூடும். ஆகையினால் குருமாரிடத்திற் படித்தும் பிற வழிகளினாலும் பலனை அடைந்து நல்லுணர்வின்றி இருக்கும் செய்நன்றி கொன்றார்க்குத் தம்பையாப் பிள்ளை எழுதின காரியம் நல்ல கண்டனையைக் கொடுக்கும். மேலும் திருவள்ளுவர்

எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லைச்
செய்நன்றிகொன்றமகற்கு.

To the Editors of the Morning Star.

Gentlemen,—It is worthy of grateful consideration by the Tamil people that you have undertaken to edit a periodical with a view to their improvement in the knowledge of arts, sciences, and literature, as the European nations. I request that you will be pleased to insert in your valuable paper the following remarks concerning the good done to our countrymen by the Missionaries who are the sole helpers of your undertaking, and the authors under God of many blessings that you and we are now enjoying.

It is evident that there is a vast difference between the present state of our countrymen, and that which existed 25 years ago. Formerly, a majority of our countrymen did not know how to read and write even our native language, for the want of means. The Missionaries actuated by the most kind and generous motives, on hearing of our ignorance in this as well as in other respects, and of our attendant wretchedness, left their friends, and their native land and came to this strange country a distance of 12,000 miles, and have established schools, and have made known the word of God to the people.

They have also established a Seminary in which they have been feeding, clothing, and teaching gratuitously, a great number of pupils, whose minds have been improved in the knowledge of Grammar, Literature, and different branches of science and arts.

By their zealous instructions—their daily and kind exhortations, and above all by their good example, a great improvment has been effected; many, who were once ignorant, barbarous, and unpolished, have not only become learned, civilized, and polished, but have also become rich, useful and happy. This is especially true of those who have received the benefits of the Batticotta Seminary. Some have indeed partaken of these favors, and have made returns of ingratitude and illwill which are highly disgraceful to them and very disheartening to their kind benefactors, who notwithstanding, compassionate their wicked and degraded state, and would have them return as the prodigal, with repentance, to their father's bosom.

Who could have acted more nobly and charitably than these benevolent missionaries have done? What ought we to do in return for all these acts of kindness? We ought certainly to shew ourselves grateful and endeavour by every means in our power to encourage and assist them in their labors of love. And we should also beseech Almighty God that his blessing may attend their efforts and that they may be rewarded a thousand fold for their labors and cares for our benefit.

Jaffna, March, 1841. S. Tampiahpully.

To the Editors of the Morning Star.

Gentlemen,

You will oblige the undersigned and many of your readers, by inserting in your paper the following mathematical question which is given both in English and Tamil and requesting the mathematical students who may be able to solve it to give not only the answer, but also the method by which it is solved.

Calpentyn 25th, June, 1841. J. W.

A King, having thirty regiments under the command of a General, ordered sixteen of them to go to fight against an enemy. The order being specific only in regard to the number of the Regiments, in executing it in how many ways can the General select the regiments?

கணக்குக்கேள்வி.

ஒரு இராசாவுக்கு முப்பது பட்டாளமும், அந்தப் பட்டாளங்களுக்கு ஒரே சேனைத்தலைவனுமுண்டு. தனது மாற்றானோடே சண்டை செய்ய அவைகளிற் பதினாறு பட்டாளத்தை அனுப்பும்படி இராசாக் கட்டளையிட்டான். இன்னின்ன பட்டாளமென்று குறியாமல் இத்தனை பட்டாளமென்று மாத்திரங் குறித்திருப்பதினாலே, அந்தச் சேனைத்தலைவன் பட்டாளங்களை எத்தனை விதங்களாய் மாறி அனுப்பிக்கொள்ளக் கூடுமென்று சொல்லவும்.

காகிதப் பிரத்தியுத்தரம்.
[Answers to Correspondents.]

“நல்லூர் மாணாக்கன்” நயிடதத்தைப் பற்றி மேலும் எழுதி அனுப்பின காகிதமுழுதும் அச்சடிப்பிக்கமுடியாது. ஏனெனில் நீர் தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார் செய்த உரையிற் குற்றமுண்டென்று “மாணாக்கன்” சொன்னவையை முன்னே அச்சடிப்பித்து அதற்கு முதலியாரவர்கள் அக்குற்றங்களை நிவர்த்திபண்ணும்பொருட்டு நியாயப்படி இடங்கொடுத்தோம். முதலியாரவர்கள் அக்குற்றங்களை நிவர்த்திபண்ணி எழுதினது மாத்திரமல்ல, “மாணாக்கன்” செய்த உரையிற் குற்றமுண்டென்று எடுத்துக்காட்டினார். அதையும் அவர்வரத்துக்கொருமுறை செய்ய நியாயமாயிருந்தது. மாணாக்கனோ இப்பொழுது எழுதின காகிதத்தில் தான் முன்னமே முதலியாரவர்களிற் கண்டதாய் எழுதின குற்றங்களை அவர் மறுபடி நிராகரித்ததில் மேற்படி அதில் இன்னின்ன குற்றமுண்டென்றும், தனது உரையில் முதலியாரவர்கள் எடுத்துக்காட்டின குற்றங்களிற் சிலவற்றை நிராகரித்தும் பெருக்கமாய் எழுதியிருக்கின்றது. இது முழுவதும் அச்சடிக்கப்போகாது. ஏனெனில் ஒருதரிலே குற்றத்தை எழுத அவர் அதை நிராகரித்துத் தன்னைக் காத்துக்கொள்ள இடங்கொடுப்பது நியாயம். அப்படி நிராகரித்ததில் இன்னுங் குற்றமெடுத்துக்காட்டில் மறுபடியும் அத்தை நிராகரிக்கில் இடங்கொடுக்க வேண்டும். அதற்கு எங்கள் உதயதாரகைப்பத்திரத்திலே நடைதந்த தருக்கத்தைப்பற்றியல்லாமல் மற்றியாவையுந் தள்ளவேண்டிவரும். இத்தருக்கத்துக்கு முடிவுவராது. அது பெருகின இடத்தும் எங்கள் பத்திரம் போதியதாயுமிராது. “மாணாக்கன்” தன்னால் எடுத்துக் காட்டப்பட்ட குற்றங்களை நிராகரித்த பகுதியைமாத்திரம் அச்சடிக்கவும் அல்லது மறுபடி அது ஒரு காரியத்தைப்பற்றிமாத்திரம் எழுதி அனுப்பித்தனைக் கொடுத்துக்கொள்ளப் பிரியமானால் அத்தை அச்சடிப்போமென்றறிவித்தோம். அப்படிச் செய்கிறதற்கும் போதிய இடங் கொடுத்தோம். இதற்குமேலாக எங்களால் ஒன்றுஞ் செய்யப்பெறாது.

“இலக்கண நுட்ப விசாரணைக்காரன்” கேட்ட கேள்விக்கு மறுமொழி வந்திருக்கின்றது.

புதினச் சங்கதிகள்.

யாழ்ப்பாணம்.

போனமாதம் ௧௧தி. காரதீவிலிருந்து கற்பிட்டிக்குப் போகவெண்ணின பயணக்காரர் மூன்றுபேரும் தபால்க்காரனுந் தோணியிலேறிப் போகையிலே காற்று எதிர்த்தடிக்க அந்த நாலுபேர்களுந் தோணியைப் பலனாகப் பிடித்திருந்தும் காற்றினால் தேவடையைக்கொண்டு அங்கும இங்கும் போகத் திரை எழும்பத் தபாற்காரன் கைவிட்டமிழ்ந்திறந்தான். அவனுடைய சரீரமும் அவன் வைத்திருந்த கடதாசிக்கட்டுகளும் காரதீவுக்கு வடக்கு வளமாக ௯ கட்டை தூரத்திற்கு அப்பால் இரண்டு நாளையில் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது.

அவத்தமான இந்தச் சாவினால் இவனுடைய பெரிதான சமுசாரத்துக்கு அதிக துயரம் உண்டுபட்டது. மற்றப் போக்குவரத்துக்காரரான மூன்றுபேருந் தோணியுடனே அலைகண்டு காரதீவுக்கு வடக்கு வளமாக (௰௨.) கட்டை தூரத்துக்கப்பால் தோணியும் அவர்களும் கரைசேர்ந்தார்கள்.

Digitized by Google

அமரிக்கன் மிசியோனைச் சேர்ந்த கனம்பொருந்திய, செ. ஆர். எக்கட் ஐயர் தன் மனைவியின் சரீர சுகத்துக்காக, அவளை அழைத்துக்கொண்டு வட கரைக்குப்போக இன்றைக்குப் பயணப்பட்டிருக்கிறார்.

மேலான கனம்பொருந்திய சுப்பிறீங் கோட்டு முதல் நீதவானும் அக்கோட்டின் உத்தியோகஸ்தரும் வடமாகாணத்திற்கு வரும்படி கொழும்பில் இருந்து இந்த மீ. சுதி புறப்பட்டுச் சலாபத்தில் அ. தீ. யன்றோடு கூடினதாக எண்ணவேண்டியிருக்கிறது. அவர் வருகிற வெள்ளிக்கிழமை அல்லது சனிக்கிழமையில் வந்து சேருவார் என்று காத்திருக்கிறோம்.

பருத்தித்துறையில ரேகுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட மெஸ்தர் பருக்கிசன் என்பவர் கொழும்பில் இருந்து போன திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் வந்து சேர்ந்தார். முன் பருத்தித்துறையில் இந்த வேலை பராமரித்த மெஸ்தர். றேணர் என்பவர் உத்தரவுடனே இங்கிலாந்துக்கு இந்த மாதத்திற் போக இருக்கிறார்.

களுத்துறைக்கு நீதிவானாகவும், யாழ்ப்பாணத்தில் ரேகுக்கு இரண்டாம் கலக்கட்டராகவும், இன்னம் இவ்விடத்திற்றானே இரண்டாம் ஏசன்ருய் இருந்தவருமான மெஸ்தர். லெவ்லியற் துரையவர்கள் கொழும்பிலே அதிக வருத்தங்கொண்டு சற்றே சுகமடைகிறது அரிதாயிருக்கிறது. சுறுக்கிலே அவருடைய சுகசெய்தியைப் பற்றிக்கேள்வியாவோமென்று காத்திருக்கிறோம்.

சென்னபட்டணம.

சென்னபட்டினத்திற் கனம்பொருந்திய என்றர்சன் என்பவருடைய பராமரிப்புக்குக் கீழான பள்ளிக்கூடத்திற் படித்தவர்களும் சன் கப்பாந்த சமுசாரங்களிற் சேர்ந்தவர்களுமான இரண்டு வாலிபரு கடந்துபோனமாதம் இருபதாந்திகதி ஞாயற்றுக்கிழமை பொழுதுபட அவர்களுடைய கேள்வியின் பேராலே ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனின் பெயர் வெங்கிட்ட இராமய்யா, இவன் அவ்வூர்க்கோட்டின் எழுத்துக்காரியஸ்தனான. பி. இராமய்யாவின் பேரன. மற்றவன் பேர், பி. இராசகோபாலமுதலியார். இவர்கள் கிறிஸ்தவர்களானதின் நிமித்தியம் மிகுதியுந் துன்பப்படுத்தப்பட்டார்கள் மற்றநாட் திங்கட்கிழமை சாயந்தரம் இவர்களுடைய இனத்தவர்கள் இரண்டுபேர் பிடித்து இழுத்து மஸிஷனின் இடத்துக்குக்கொண்டுபோக இவர்கள் இனத்தவர்களும் ஊரவர்களும் அறிமுகமானவர்களும் சூழவர நிற்க இவர்கள் எல்லாருக்கும் முன்பாகத்தாம் நீங்கள் எங்களை அடித்துக்கொன்றாலும் அக்கினியால் சுட்டெரித்துக்கொன்றாலும் நாங்கள் கிறிஸ்துநாதரைவிட்டு மாற விருகிறதில்லை என்று தயிரியத்துடனே அறிக்கையிட்டார்கள். இவர்கள் குணப்பட்டதினால் எங்களுடைய முறைமைகளும் ஒழுக்குகளும் அழிந்துபோயினவே என்று சென்னபட்டினத்திற் தமிழர் இதற்கு மிகுதியும் எதிரிடை பண்ணுகிறவர்களாயிருக்கிறார்கள். இப்பொழுது குணப்பட்ட இவர்கள் இருவரும் உண்மையாகக் குணப்பட்டவர்களேயாகில் அது பராபரனாலே வந்த செயலே அல்லாமல் மனிதரால் வந்தசெயலல்லவே. ஐயோ! பயித்தியங்கொண்ட மனிதர் கர்த்தாவோடே போர்பண்ணுகிறார்கள். அப்படியிருக்கையாற் சங்கீதத்தின் வசனத்தைத்தானே நாமுஞ் சொல்லவேண்டியிருக்கின்றது. என்னவெனிற் சாதிகள் கொந்தளித்து, சனசதளங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? யெகோவாவுக்குவிரோதமாகவும் அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும் பூமியின் இராசாக்களெழும்பிக்கொண்டு தலைவர் ஏகமாய் ஆலோசனைபண்ணி அவர்கள் கட்டுகளை அறுத்து அவர்கள் கயிறுகளை நம்மை விட்டெறிந்துபோடுவோமென்கிறார்கள். பரமண்டலங்களில் வாசமாயிருக்கிறவர் நகைப்பார், ஆண்டவர் அவர்களைப் பரிகாசம் பண்ணுவார்.

கல்க்குத்தா.

எவ். சி. எல். மெக்கென்சியென்பவரும, இராணுவத்திற்குச் சேர்ந்த வேறொரு உத்தியோகஸ்தனுங் கற்குத்தாவில இருந்து பாய்வலித்தோடி மூன்று கிழமைக்குள்ளான ஒரு நாளில் பாய்மர துனி மட்டும் ஏறப் பேசிக்கொண்டு அப்படியே ஏறி இறங்குகையில், பித்தச் சுழற்றி உண்டாகத்தான் கை பிடித்திருந்த கயிற்றையும்விட்டு மெய்க்கிளங்கி விழுந்து இறந்தார். அவரைத் தப்புவித்துக்கொள்ளும்படிக்கு வெகு பிரயாசப்பட்டு ஒன்றுங் கூடாமற்போயிற்று.

கல்க்குத்தாவில் ஒரு உத்தியோகஸ்தன் பணம் மாற்றிக்கொண்டு வருகையில, ரு. ரூபாய் விலையுபெற்ற இரண்டு வங்குகோட்டைப் போட்டுவிட்டான. இது காரியத்தை அறியாமல் அவன மெஸ்தர் றவன் திமென் கூட்டத்தாருடைய சாய்பபுகுட்போய்த் திரும்புகையிற். குதிரைக்காரன் அவரைப் பார்த்துத் துரையவர்கள் எதுவாகுதல்போட்டுவிட்டதோ என்றுகேட்க, அவர் தன்னுடைய சாக்குகளையும்பார்த்து ஆம், ஆம், இரண்டு வங்கு நோட்டைத்தான் காணவில்லையென்று சொன்னவுடனே குதிரைக்காரன் அவைகளை எடுத்துக்கொடுத்தபோது துரையும் மிகுந்த சந்தோஷப்பட்டு வாங்கிக்கொண்டு அவனுடைய நேர்மைக்காக அவனுக்கு ள. ரூபா உபகாரமுங் கொடுத்து அனுப்பினார்.

தில்லி.

தில்லி என்னப்பட்ட ஒரு ஊரின் இராசா தனது அரண்மனையில் இருந்த பெண்களில் நடகாட்சியென்ற அரண்மனை உத்தியோகஸ்தனின் மனைவி பேரில்வேசித்தனங் கண்டு பிடிக்கப் பட்டமையால் அவர் பண்ணுவித்த ஆக்கினையாவது.

அவளை மொட்டை அடிப்பித்துக் கழுதையின் மேலேற்றி பெண்களிருக்குஞ் சாலை நிலம் நடப்பித்து இப்படி அவளை மிகவுங் கனவீனப்படுத்தினார். இது மறுபெண்களும் இவ்வித துன் நடைக்கைக்கு உட்படாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கும் படிக்காகத்தான்.

சிந்து.

மலைகளுக்கிடைவழியும் பள்ளத்தாக்குமாகிய பெலன்பாலஎன்ற வழியில் கற்பித்தான் கெல்டேன் என்பவரும்அவர் குதிரைச்சேனையும்வந்தெதிர்ப்பட்டவேளையில், மலையில் இருந்து எட்டுப்பத்தடி ஆழமான ஒரு நீரோட்டம் மிகுந்த நதியாய்ப் பாய்ந்தது. அதில் கக. மனிதரையும், நாற மாடுகளையும் ஒரு பாய்ச்சலில் அள்ளிக்கொண்டு போய்விட்டது. இந்தக் காரியம் நடந்த இடத்துக்கு உல. கட்டைதூரத்துக்குக் கீழே சிறிது பிரேதங்கள் காணப்பட்டன.

சந்துஉவிச்சுத் தீவின் கிறிஸதவர்களைப்பற்றியது.

சந்துஉவச்சித் தீவின் மிசியோனைப் பற்றிப் பிறகிட்ட சமயம். ஆடிமார்கழி. மீ. மெஸ்தர். ஆல் என்பவர் எழுதிய காகிதத்தினால் அறியவந்ததென்னவெனில், ஒகயு என்ற தீவில் இருக்குங் கனம்பொருந்திய குருவாகியவிங்காம் என்பவரின்பராமரிப்புக்குக்கீழான சபையார்வடகு அமரிக்காவைச் சேர்ந்த மேல் கரையில இருக்கும இந்தியருக்காக ஒரு அச்சடிக்குஞ்சூத்திரமும் அதற்குவேண்டியதளபாடமும் வாங்கிக்கொடுக்கும்படிக்கு ள. பவுன் சேர்த்தார்கள். அப்படியே ஆல் என்பவர்தானே அந்த அச்சும், தளபாடங்களும போய்ச்சேர்ந்தவுடனே, ஒரு சின்னப் புத்தகத்தை அடித்து முடித்து, வேறொன்றையுந் துவக்கியிருக்கிறார். இத்தீவார் இவ்விடத்துக் கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் அதிகம் வறியவர்களாயிருந்தும் அவர்களைப பற்றி இச்சரித்திரத்தைக் கேட்கையில்எவ்வளவுமனத்திருத்தி உண்டாகிறது. யாழ்ப்பாணத்தில உள்ள சபையாரைப் பற்றியும இப்படியான தருமவிருத்திச் சரித்தரம் உண்டாகுதென்று எழுதப்பட வேண்டிய சந்தோஷ சலாக்கியகாலம எப்போ நடக்கும்

SUMMARY OF NEWS.

JAFFNA.

The Rev. J. R. ECKARD and Mrs. ECKARD, of the American Mission, expect to leave Jaffna to-day—on a visit to the continent, for the benefit of Mrs ECKARD's health.

FRIEND IN NEED SOCIETY.—A Sub-Committee has been recently appointed to revise the proceedings and minutes of this Society.

The Hon'ble the Chief Justice left Colombo for the Northern Circuit on Tuesday the 6th instant. His Lordship was to have opened the session at Chilaw on the 8th, and may be expected here either on Friday or Saturday next. SIR ANTHONY OLIPHANT is accompanied by his Private Secretary H. SELLY, Esq. The Officers of the Supreme Court left Colombo also on the 6th.

Mr. FERGUSON the newly appointed assistant Collector of Customs at Point Pedro arrived in Jaffna from Colombo on Monday last.

Mr. LAVALLIER.—We regret to hear that Mr. LAVALLIERE, District Judge of Caltura who for some time filled the situation of assistant Collector of Customs, and also that of assistant Government Agent at Jaffna is in a very precarious state of health at Colombo where he was removed on account of his illness. We hope soon to hear of his convalescence.

We understand that Mr. WOODHOUSE, the Government Agent for the Western Province is soon to proceed to England on leave—and it is said that Mr. TURNOUR who is also going home will leave the island in the course of this month.—*Ceylon Herald*

From the Ceylon Herald, June 29.

MELANCHOLY ACCIDENT.—It is with feelings of regret we have to announce a melancholy accident which occurred to the ferry boat on her passage from Carativoe to Calpentyn with 8 passengers and the Tappaal of the 19th instant,—a sudden squall overtaking her before she had advanced half way, she was upset by its fury. The passengers and the Ferry-man held on firmly to the boat, but the waves running very high at the time and the wind carrying the boat to and fro with great violence, we are sorry to say that the Ferry-man let go his hold and sunk exhausted into a watery grave. The passengers were

Digitized by Google

washed ashore together with the boat about 12 miles north of Carrativoe. The body of the unfortunate Ferry-man was picked up twodays afterwards about 9 miles North of Carrativoe with the fragments of the packet of letters. The poor man we understand has left a numerous family to deplore his untimely oss.

MADRAS.

Baptism of two Hindu youth.—We are happy to learn by the Madras Herald that two of the Hindu pupils connected with the General Assembly's Mission School at Madras were baptised on Sunday evening the 20th ult. by the Rev. Mr. ANDERSON, senior Superintendant of the Institution, at their own special request. Their names are Vencata Ramiah, grandson of P. Ramiah, Registrar of the Petty Court, and P. Rajogopaul, a Moodeliar, also of a respectable family.

The power of Christ's Gospel alone constrained them to submit to his baptism, and to suffer the loss of all things for his name's sake. For two hours on Monday afternoon they endured a fiery trial before two of their near relatives; and in spite of all their intreaties, they told them they were determined to return no more to Hinduism. On the same day, they witnessed a noble confession before the Police Magistrates in the very midst of their countrymen, their relatives and kinsmen.

They said they were determined to return with Mr. Anderson, and would rather be *burnt* or *die* than renounce the Lord Jesus Christ. Terrors did not dismay them, for the Spirit of God helped them, and they were strong in the power of his grace. The attempt of their friends to rescue them failed. Ever since they have been full of peace and joy in believing, and are truly Christ's freemen. In the grave of their strongest sympathies and natural affections, they have buried Caste and Hinduism, not of constraint but willingly. As was naturally to be expected, the event has for the present affected the numbers of the Institution very materially. But the panic will subside and many youths will return.—*Herald.*

We hear that the converson of the two youth mentioned above has produced a great stir amongst the heathen at Madras who are crying out against it as an invasion of their rights. They should know that these conversions if genuine, are not the work of man but of God. What fools then are they to fight against Him. Well may we say in the language of the Psalmist-"Why do the heathen rage and the people imagine a vain thing? The kings of the earth set themselves and the rulers take counsel together, against the Lord and against his Anointed, saying, Let us break their bands asunder and cast away their cords from us: He that sitteth in the heavens shall laugh: the Lord shall have them in derision." *Ed Star.*

Discontinuance of Government salutes at heathen festivals.

The *Atheneum* of Thursday last announces that "under instructions from the Court of Directors, arrangements are about being made to discontinue the firing of salutes at *native*," that is to say, at *heathen*, "festivals." We are extremely glad to hear this, and shall be happier if the "arrangements" are speedily matured, and then without further delay carried into effect. These idol salutes ought to have ceased long ago, but "better to do well late than never."—*Herald.*

MADURA.

From a Madura Correspondent July 6th.

This morning at 7'o clock the members of the "Madura (American) Mission English School" passed their Annual Examination.—About fifty visitors were present including the Collector of the District—the Physician and commandant of the Station and most of the Missionaries—together with a large body of native residents.—Annexed is a list of the Classes in the school and the studies pursued during the year.

1st. Class containing 13 members; 2nd. Class, 26; 3d. Class, 18; 4th. Class, 19; 5th Class, 21; 6th Class, 12. These together with Eight whose names do not stand on the Rolls above referred to, make the number 115.

The studies pursued have been various from the Elements of the Language, to "Good's Book of Nature,"-"Ancient History," &c.-The instruction has been carried on principally by the Head Native Assistant, S. CONE, formerly a member of Batticotta Seminary and by members of the First Class.—Most of the youths have given themselves to their studies with diligence, and all cherish a strong desire to become masters of a language so rich and full as is the English, and which is so important not only as preparatory to offices of influence in this country, but as being that in which the most instructive and literary and scientific productions are to be found.

CALCUTTA.

Melancholy Accident.

Mr. F. G. L. Mackenzie, and an officer of the 16th Foot, on board the *Madagascar*, one day when about three weeks' sail from Calcutta agreed to go to the top-mast or mast head of the ship. On their way down and when near the deck, Mr Mackenzie became suddenly giddy, lost his hold, and fell overboard never to rise again. The ship was going between nine and ten knots through the water at the time, and was half a mile from the spot where he fell before a boat could be lowered. Every possible exertion was made to save him, but all to no purpose.

HONESTY REWARDED.—A military officer, in coming out of the Exchange, dropped two bank-notes, of the value of a thousand rupees. Unconscious of the circumstance he proceeded to the shop of Messrs. Twentyman and Co. and on leaving it, was accosted by a sircar, who enquired if the gentleman had lost any thing. On examining his pockets the officer missed the notes which very honestly the sircar at the same time presented to him. The officer very generously recompensed the sircar's honesty by giving him a reward of a hundred rupees.

TREATMENT OF DHOST MAHOMMED.—We are sorry to hear that Dhost Mahommed complains bitterly of the treatment, to which he has been subjected, and we are afraid, moreover, that his complaints are not without just cause.

SCINDE.

"*Thou carriest them away as with a flood.*"—A detachment of Cavalry under the command of Capt. HALDANE, in passing through the celebrated Bolan Pass, (a narrow and difficult defile thro' a mountainous tract,—was met by the irruption of a mountain stream, which came dashing upon them in a torrent of 8 or 10 feet depth, with such suddenness and force that 33 men and 101 head of cattle were swept away and destroyed. Some of the bodies were afterwards found 20 miles below the spot where the accident occurred.

THE PUNJAUB.—We hear, from very good authority that it is fully the intention of Government to support Shere Sing and that this prince has agreed to every thing required of him, expressing himself anxious that we should give him a subsidiary force, and undertake the tranquillizing of his country.

DELHI.

His Majesty has, we understand, been making an example of a dereliction from virtue in the Palace, but we are glad to find that the punishment awarded on this occasion, was not so barbarous as has heretofore been inflicted. The object of the King's *virtuous* indignation in this instance was the wife of a *Nuckarchee*, who, after her head had been shaved was mounted on an ass and paraded through the female apartments as a warning against similar misdemeanour in others. We can laugh at this, and, notwithstanding think it as efficient a mode for entailing disgrace, if not more so, than the cruel one of mutilating noses and ears.

"IMPORTANT NEWS FOR HUMANITY FROM TUNIS.

Abolition of Slavery in this Regency!

By a letter, dated Tunis, 1st May, 1841, we learn with the greatest satisfaction, that a slave having applied to the British Consul General, Sir Thomas Relade, for protection from the cruelties of his master, Sir Thomas immediately laid the case before the Bey, recommending to his Highness the policy and humanity of abolishing the Slave-trade in his dominions. THE BEY AT ONCE CONSENTED—*and gave liberty to all his own slaves, promising likewise to put a stop to their importation and exportation, and to persuade all his subjects to follow his example.* If the Bey of Tunis carries out his noble and philanthropic intention, he will immortalize his name in the annals of African freedom and civilization—united with that of the British Consul General."—*Malta Times.*

This piece of News would be more worthy of confidence if the proceeding of the Bey alluded to above had been attended with more deliberation.—*Ed. M. Star.*

SANDWICH ISLANDS' NATIVE CHRISTIANS.—By a letter dated Dec. 1840 just received from Mr E O Hall of the Sandwich Island's Mission, we learn that the native church in Oahu under the care of the Rev. Mr. Bingham, made a contribution of £100, to purchase a Press and other materials for a small printing Office for the use of the Indians on the W. Coast of N. America. The press was sent under the charge of Mr. HALL, and he had had the pleasure of printing one small Book for their use, and of commencing another.—These islanders are in much poorer circumstances than the members of the native Church here, and such an instance of their liberality is truly gratifying.—When shall we have the happy privilege of recording a similar instance of well-doing on the part of the native church in Jaffna?

அட்டவணை.—CONTENTS.

இந்து தேசச் சரித்திரம் 133
கூட்டெம்பவர் செய்த பிரபஞ்ச நூல் - - 134
தென் சமுத்திர தீவுகளில் நடந்த சங்கதி - 136
இந்தியர் கணித சரித்திரம் 137
இலக்கணக் கலஞ்சியம் 138
பஞ்ச தந்திரக் கதை - 139
ஆய்ந்தோய்ந்து பார்த்தலறிஞர் பெருமை - 140
ஏசாயாவின் தீர்க்கதரிசனம், ருரு. அதிகாரம் - 141
கணக்குக் கேள்வி - 142
காகிதப் பிரத்தியுத்தரம் ib.
புதினச் சங்கதிகள் - ib

Page
Brief Historical view of India - 133
Abridgement of Good's Book of Nature - - - - 136
From Williams' Missionary Enterprizes in the South Seas 136
History of Hindu Astronomy, read at an Examination of Batticotta Seminary - - 137
On Tamil Grammar - 138
Pancha-Tantra-Katei - 140
An Anecdote - - - ib.
Answers to Correspondents - 142
A Question in Mathematics ib.
Summary of News - - 142

Printed and published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor,—Edited by Henry Martyn and Seth Payson.

Digitized by Google